விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

அண்ணா கோப்பி

வாடிக்கையாளருக்கு

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில்

அண்ணா கோப்பியை

சுவைகுன்றாதுஉடனுக்குடன் அரைத்துப் பெற்றுக் கொள்வதோடு இனாம் பொருட்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஈழநாடு

வாரமலர்

THE EELANADU VARAMALAR

MILKWHITE BAR SOAP

மில்க்வைற் பார் சோப் பெரிய அளவிலும், சிறிய அளவிலும் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. 2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியை அல்லது வெளியீடுகளில் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

மலர் 20 ஆவணி 18 றமழான் 29 ஞாயிற்றுக்கிழமை (3-9-78) இதழ் 204

# தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்த தேவையில்லை

## 'அமிரின் செய்திக்குப் பல வட்டாரங்களில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தேவையற்ற சிக்கல்களை சோதனை மிகுந்த இச்சமயத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திவிடாமல் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும் குறிப்பாக இளைஞர்களும் கவனித்துக்கொள்ளவேண்டுமென்ற முறையில் இன்று வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாடு செல்ல முன் விடுத்த செய்திக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும், இளைஞர் பேரவைக்குள்ளும் மட்டுமல்லாது இதர அரசியல் கட்சிகளின் மத்தியிலும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

இப்போதுள்ள நிலையில் பகிஷ்கரிப்பு, ஹர்த்தால் என்பது போன்ற சிறு சிறு போராட்டங்களில் ஈடுபடுவதில் அர்த்தமில்லையென்றும் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறி தமிழ் மண்ணைக்காப் பாற்றுவதுடன், தமிழ் மக்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதே நோக்கமாக இருக்கவேண்டுமென்பதே கூட்டணிக்குள்ளும் இப்போது ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிறு சிறு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது கூட்டணிக்கு எதிரான சக்திகளும் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தி அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அப்பாவித் தமிழ் இளைஞர்களின் தலையில் சுமத்திவிடுமென்ற அபிப்பிராயமும் கூட்டணியினர் மத்தியில் தோன்றியுள்ளது.

## அமிர் தம்பதிகள் இன்று வெளிநாடு பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் இன்று இரவு லண்டன் பயணமாகின்றனர்.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலயத்திலிருந்து இன்று இரவு 9-20 மணிக்கு இவர்கள் பயணம்செய்யும் 'சுவிஸ் எயர்' விமானம் புறப்படும்.

அமிர் தம்பதிகள் சுகத்தோடும் ஜெயத்தோடும் திரும்பிவர அவர்களை வாழ்த்தி வழியனுப்பிவைப்பதற்காக தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் கூட்டணி பாரர்ளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணி

(10-ம் பக்கம் பார்க்க)

## வடஇந்தியாவில் பெருவெள்ளம்; பலர் பலி!

(புதுடில்லி, செப். 2)

வட இந்தியாவில் ரர்ஜஸ்தான், உத்தரபிரதேசம், ஒரிஸ்ஸா, ஹரியானு, ஹிமாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடைமழையும் வெள்ளப் பெருக்கும் நதிகள் ஆறுகள் கரைபுரண்டு ஓடுவதும், மண்சரிவுகளும் பல உயிர்ப் பலியை ஏற்படுத்தியிருக்கின்றன. லட்சக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து அநாதைகளாகியுள்ளனர். போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளன. இந்த மாநிலங்களில் போர்கால அடிப்படையில் நிவாரண, மீட்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10-ம்பக்கம் பார்க்க)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உற்சவம்

## இன்று கொடியேற்றம் நாளை தேர் வெள்ளோட்டம்

(யர்ழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை திங்கட் கிழமை நடைபெறும்.

தேர்த்திருவிழா 13-ம் திகதியும், 14-ம திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

சித்திரத்தேர்வெள்ளோட்ட விழாவின் நாளையதினம் ஸ்தபதி கலாகேசரிஅ தம்பித்துரை பூசகர் சிவஸ்ரீ ஞா. குமாரசுவாமி குருக்கள், நாதஸ்வர கலாநிதி திரு. என். கே. பத்மநாதன் ஆகியோர் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கபடுவர். சிறப்பு மலரும் வெளியிடப்படும். அன்னதானம் இடம்பெறும்.

சுங்கப்பகுதி திடீர் வேட்டையில்

## 5700 கெற்புகளும் 24 ரு. அபினும் யாழ் நகரில் பிடிபட்டன?

(யாழ்ப்பாணம்)

சுங்க இலாகாவினரின் திடீர்சோதனையில் 5700 டைனமற் கெற்புகளும் 24 ரூத்தல் பத்தரை அவுன்ஸ் அபினும் யாழ்ப்பாணத்தில் உள்ள வீடொன்றில் கைப்பற்றப்பட்டது.

கள்ளக்கடத்தல் பொருட்களாக இவை பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலைத்தொடர்ந்து யாழ். சுங்கப்பகுதி பொறுப்பதிகாரி திரு. கே. பாக்கியநாதன் இந்த திடீர்வேட்டையை நடத்தினர்.

அபின் வைத்திருந்ததாக வைரவநாதன் என்பவரும் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். உதவி சுங்கசேகரிப்பாளர் திரு. சேனரத்தின முன்னிலையில் இவர்கள் ஆஜர்செய்யப்பட்டபோது வைரவநாதனுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பாலசுந்தரத்துக்கு 5750 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு பின்னர் யாழ். பொலிசாரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பொருட்களும் உதவி சுங்கசேகரிப்பாளரால் பறிமுதல் செய்யப்பட்டன. (கூ)

தனித்து நின்று எதையும் பெற முடியாது!

## 'சகல நிலைகளிலும் பங்காளிகளாக வேண்டும்'

### சிறுபான்மை தமிழருக்கு உடுப்பிட்டி எம். பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

''சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்கொள்கைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவர்கள் எவராவது விரோதமாகவோ, எதிராகவோ செயல்பட்டால் நான் கூட்டணியிலிருப்பதில் எதுவித பயனுமில்லை. சாதி ஒழிப்புக்கு மாறாக செயல்படும் கூட்டணி அங்கத்தவர்களை அதிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கோரிக்கைவிடுத்துள்ளோம்.''

தெல்லிப்பழை கட்டுவன் புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற புதிய கட்டிடத் திறப்புவிழாவுக்குப் பின்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், உடுப்பிட்டி எம். பி திரு த இராசலிங்கம் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பேற் கண்டவாறு குறிப்பிட்டார்.



பாடசாலைப் புதிய கட்டிடத்தையும், ஆசிரியர் சீ. செனாதிபிள்ளையாலும், மாணவர்களாலும் அமைக்கப்பட்ட பாலர் செயற்பாடப் பொருட் காட்சியையும் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன் துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைத்தார்.

பாடசாலை அதிபர் திரு. வ. சதிரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராசலிங்கம்மேலும் கூறியதாவது:

''கூட்டணியின் சகல கிளைகளும் சாதி ஒழிப்பு விஷயத்தில் தீவிரமாக ஈடுபடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

''பாடசாலைகள் மூலமும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

''30 ஆண்டுகாலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ, ஐக்கிய தேசியக்கட்சியோ சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வு வழங்கவில்லை ஆனல் சாதிப் பிரச்சினையைவைத்து தமிழினத்தைப் பிரிவினைக்காளாக்கியது தான் அவர்கள் அளித்த நியாமான தீர்ப்பு.

(10-ம் பக்கம் பார்க்க)



நயினை திரு. மு. நவரத்தினத்தின் இசை அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். மதுரை எஸ். சோமசுந்தரத்தின் சிஷ்யரான இவரது நிகழ்ச்சிக்கு பக்கவாத்தியங்களாக சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ், வெங்கடேஸ்வர சர்மா வயலினும், சங்கீதபூஷணம் ,ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கமும், சங்கீதரத்தினம் எஸ். மகேந்திரன் கெஞ்சிராவும், எஸ். என். ஜேம்ஸ் முகர்சிங்கும் வாசிப்பர். வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் தலைமைவகிப்பார்.

# திருமணத்திற்கு தடை மகள் தற்கொலை

(முல்லைத்தீவு)

மாப்பிள்ளைக்கு வயது போதாதென்ற காரணத்தினால் தாயார் திருமணத்திற்குத் தடைபோடவே, 20 வயது யுவதி நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

முத்தையன்கட்டைச் சேர்ந்த ஆர். கறுப்பாயி என்ற யுவதியின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

முள்ளியவளைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. தியாகராசா மரண விசாரணை நடத்தினர்.

யுவதிக்கும், இராமலிங்கம் என்ற இளைஞருக்குமிடையில் தொடர்பு இருந்ததாகவும், இருவரும் திருமணம்செய்ய விரும்பியபோது, மாப்பிள்ளைக்கு வயது போதாதென யுவதியின் தாயார் தடைசெய்ததாகவும், இதனால் மனமுடைந்த யுவதி நச்சுத்திராவகத்தை அருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## பொலிசார்மீது கைக்குண்டுவீச்சு

(கொழும்பு)

பொலிஸ் வானொலி மோட்டார் வண்டியையும், அதில் இருந்த பொலிசாரையும் கைக்குண்டு எறிந்து காடையர் கோஷ்டி ஒன்று தாக்கிய சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பு கொம்பனித்தெரு தேவாலய வீதிச் சந்தியில் நிகழ்ந்தது. இதில் தாக்குண்டு தலையில் காயமடைந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிசாரின் வானொலி மோட்டார் வண்டியும் சேதமாகியுள்ளது.

கொம்பனித்தெரு தேவாலய வீதிச் சந்தியில் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிசார் சனநெருக்கடியை சந்தியிலிருந்து அகற்றும்பொழுது காடையர் துப்பாக்கியால் சுட்டும், கைக்குண்டு வீசியும் பொலிசாரைத் தாக்கினர்கள் எனத்தெரியவருகின்றது. (ஊ)




பிரவுண்சன் அரறூட் அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.


## ஏல விற்பனை

### வெள்ளுருவ மரம்

கச்சாய் கண்ணகை அம்மன் கோவில் வாசலில் நிற்கும் 9 அடி உயரமும் 12 அடி சுற்றளவும் உள்ள வெள்ளுருவை மரம் எதிர் வரும் 10-9-1978 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்குக் கோவில் மைதானத்தில் ஏல விற்பனை செய்யப்படும். ஏலத்தில் சித்தி பெற்றவர் முழுப் பணத்தையும் உடன் கட்ட வேண்டும். இரண்டு கிழமைக்குள் மரத்தைத் தறித்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

தர்ம கர்த்தா சபை.

0219

### கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவசங்க

## வருடாந்த பொதுக்கூட்டம்

17-09-78 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் தரவும். மேலும் விபரங்களுக்கு காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

ச. தெட்சணாமூர்த்தி
இணைச்காரியதரிசி

0230

## திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி வருடம் ஆவணி மாதம் 21-ம் நாள் (6-9-78) புதன்கிழமை பகல் 10 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில்

செல்வன் மா. மதியாபரணன் (மதி) க்கும்

செல்வி வே. சாந்தினிக்கும்

நடைபெறும் திருமணத்திற்கு சுற்றம்சூழ வருகை தரும்படி வேண்டுகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

சி. மார்க்கண்டுவும் க. பத்மநாதனும் பாரியாரும்
த. வேலுப்பிள்ளையும் பாரியாரும்,

சட்டநாதர் றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

0234

## கேள்வி விளம்பரம்

### முள்ளிப்பற்றுக் கிராமசபைப் பகுதி இயக்கச்சி

கீழ்க்காணப்படும் வேலைகளுக்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100--ம் மீளளிக்கப்படாத பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரத்தில் 20-9-78 காலை 11-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். 19-9-78 காலை 11-30 மணிக்குப்பின்னர் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

### வேலை விபரம்

1. வெற்றிலைக்கேணி கட்டைக்காடு வீதி 2200 அடி,
2. கட்டைக்காடு வண்ணாங்குளம் வீதி 1 மைல்.

மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

எம். எம். மக்பூல்,
விசேட ஆணையாளர்,
முள்ளிப்பற்றுக் கிராமப் பகுதி,
இயக்கச்சி.

முள்ளிப்பற்று
கி. ச. காரியாலயம்,
இயக்கச்சி,
24-08-78.

குறிப்பு:- 26-8-78 பத்திரிகையில் 19-02-78 காலை 11-30 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது என வெளியானது தவறுகும். 0153

## தலைமை (Head) ஒப்பறேற்றர் தேவை

திறமைமிக்க, அனுபவமுள்ள, குறைந்தது 7 வருட முதல் 10 வருடம் ஒப்பறேற்றராக (செயிலி புறயெக்ரரில் கடமையாற்றியவருக்கு முதல் இடம் கொடுக்கப்படும்) கடமையாற்றிய ஒருவர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் செய்பவர் தலைமை ஒப்பறேற்றர் பதவி வகிக்க திறமையுடையவராக இருக்க வேண்டும். முன் கடமையாற்றிய தியேட்டர் பொறுப்பதிபர்களிடம் இருந்து திறமை, நன்நடத்தைபற்றிய 3 நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்ப வேண்டும்.

ம. பொன்னையா
முகாமையாளர்,
நியூ இந்திரா படமாளிகை
வவுனியா.

0227

# வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள அலுமீனியம் ஸ்பின்னரும், எலக்ரோபிலேட்டிங் செய்பவரும் உடனடியாகத் தேவை. 3-9-78 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 தொடக்கம் 12-30 மணிவரை நேரில் வரவும். வட இலங்கை அலுமீனியம் தொழிற்சாலை, 19/4, கில்னர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 0223

பித்தளையினால் செய்யப்பட்ட ''டைமன் செயின்'' உடனடியாகத் தேவை. (பட்டம் வெட்டாதது) வேலைக்கு ஏற்றபடி கூலி கொடுக்கப்படும். விபரங்கட்கு: A. S. துரைசிங்கம், 62/1, பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 0186

யாழ்நகர் பஸாரிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. ஆ. க. கனகசபாபதி அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0233

### விற்பனைக்கு

ஜீப் வில்லீஸ் பெற்றோல். முதல் நியாயமான விலை கோருபவருக்கு விற்கப்படும். 15, சோமசுந்தரம் அவனியு, கச்சேரியடி, யாழ்ப்பாணம். 0228

## விற்பனைக்கு

ரெமிங்ரன் 10'' பாவனையில் உள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரம் கேள்விப் பத்திரங்கள் மூலம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு நேரிலோ அன்றிக் கடித மூலமோ எம்முடன் தொடர்பு கொள்ளலாம். காரியாலய நாட்களில் காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையிலும், சனிக்கிழமைகளில் 8-00 மணிக்கும் 1-00 மணிக்கும் இடையில் நேரில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் 15-9-78 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ. கந்தையா:
தலைவர்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

23-8-78. 0129

### விற்பனைக்கு

மீசாலை கண்டிவீதி அருகாமையில் 3 அறை கொண்ட கடைக் கட்டிடம் உள்ள காணியும், வீடு, கிணறு உள்ள 6 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் இன்றி கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பரதாரர்: 34, Frankfurt Place, Colombo-4. 0229

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த ஸ்தாபனத்திற்கு பென்ஸிகுட்ஸ் வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த ஆண் சேல்ஸ்மேன் தேவை. 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0187, C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம்' 0187

சிறு குறைகள் கொண்ட முற்றிலும் புதிதாக 'றிபீல்ட்' செய்யப்பட்ட லொறி டயர்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0199

சொந்தப் பாவனையில் உள்ள ஆஸ்டின் A50 சார்-EN 9000 தொடர் இலக்கம் விற்பனைக்கு உண்டு சனி- ஞாயிற்றுக் கிழமைகளில் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். ராஜா கார்ப்பறேசன் 104, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். அல்லது சேகரம் கட்டிடம், கொட்டடிறோட், யாழ்ப்பாணம். தொலைபேசி:7575 0214

புதிய மொடல் தமிழ் ரைப்றைட்டர் ரெமிங்டன்-27'' ஒலிம்பியா-18'' ஆர். கே. அன்ட் சன்ஸ், 129, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0215

C. C. 137/1 இலக்கமுடைய புதிய HONDA (BENLY) விற்பனைக்கு உண்டு. அ. ஸ்ரீகரன், சுதுமலை, ஆனைக் கோட்டை. 0236

CV தொடர்பிலக்க FORD டிலிவரி வான் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. முருகன் இன்டஸ்றீஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0183



# வாழ்வைத்தேடி

கோவிலின் முன்னுள்ள தண்ணீர்த் தொட்டியில் நீர் அள்ளிக் கைகால் கழுவிப் படிகளிலேறிக் கோபுர வாசலையடைந்து அதிகார நந்தியை வணங்கி உள்ளே சென்று நேராக விநாயகர் சந்நிதானத்தையடைந்து கும்பிட்ட வேளைவரை என் மனத்தில் கருங்கல்லாகக் கனத்துக் கொண்டிருந்த என் மனக்கவலை-மனவேதனை- எதுவுமே, கோபுரவாசலைத் தாண்டிப் படியொவ்வொன்றாக இறங்கி வெளிவீதியை நோக்கி வருகின்ற இந்தவேளையில் எனக்கு இல்லையே இல்லை! அக்கவலையெல்லாம் எங்கேயோ எப்படியோ மறைந்துவிட்டன. என்மனம் இப்போது சஞ்சலமற்றுத் தெளிந்துள்ளது என்பதனை நான் நன்கு உணருகின்றேன்!

என் மனத்தெளிவுக்குக் காரணமாக அமைந்துள்ள என்மனத் தீர்மானத்தை நாளைக்காலையில் நீதிமன்றத்தில் நான் கூறத்தான் போகின்றேன், அதன்பின் என்வாழ்வு மென்மேலும் உறுதிமிக்கதாக அமைந்துவிடும்!

கடந்த ஆறுமாத காலமாக நானும் என் மூன்று பிள்ளைகளும் அனுபவித்துவருகின்ற சோதனைகளும் வேதனைகளும் மறைந்துவிடும்!

என் கணவரின் துணையில்-காவலில்-நிழலில் - குழந்தைகளுடனும் ஜெயாவுடனும் நிம்மதியாக நாளைதொடக்கம் இருப்பேன்!

சீச்சீ...! என்னால் வந்தவினை தானே! அடுத்தவர் சொல்லைக் கேட்டதாலே வந்த வினை தானே!

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் என்பார்களே! அது என்னளவில் உண்மையாகி விட்டதே!

''மனோ! என்னுடைய நிலையைச் சற்றே ஆறுதலாக இருந்து யோசித்துப்பார், ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. நம்பி வந்தவளை நட்டாற்றில் விடுவதா, மனோ? அதுவும் வாயும் வயிறுமாக இருக்கிறவளை நான் நாயினைப்போல் விரட்டிவிடமுடியுமா? அவளின் நிலையில் உனது தங்கை இருந்திருந்தால்-அவள் நம்பிச் சென்றவன் கைவிட்டால்-அவள் என்னசெய்வாள்? ஜெயத்தை உன் தங்கையாக வைத்துச் சிந்தித்துப் பார் மனோ! உனக்கு இப்படியொரு நிலை தற்செயலாகவேனும் ஏற்பட்டிருந்தால் உன் நிலையில் நீ என்னசெய்வாய்? என்றுகொஞ்சம் அமைதியாக - ஆத்திரத்துக்கு இடம்கொடாது-இருந்து யோசனைசெய்துபார் மனோ'' என்று எத்தனை தடவை என் கணவர் சுரேஷ் கெஞ்சி இருப்பார்; அதுவும் என் காலில் விழாத குறையாகக் கெஞ்சி மன்றாடி இருப்பார், என்பதனை இப்போதுதான் நினைத்துப் பார்க்கின்றேன்.

அந்த நேரத்தில் ''நம்பி வந்தவள் நானிருக்க, தாலி கட்டிய மனைவியொருத்தி நானிருக்க இன்னொருவளை நாடி அவர் - சென்றுவிட்டாரே'' என்று ஆத்திரம்-சீற்றம்-கொண்டிருந்ததில் அவரது வார்த்தைகளை எடைபோட்டுப்பார்க்க எனக்கு விருப்பமே இருக்கவில்லை!

''மனோ, என்னை விட்டுப் பிரிந்து போகாதே. உங்களிருவரையும் என்னிருகண்களாகக் கொண்டு காப்பாற்றுவேன். என்னை மன்னித்துவிடு மனோ. என்னை வஞ்சிக்காதே'' என்று சுரேஷ் என்னைக் கெஞ்சிக்கேட்டதனையும் பொருட்படுத்தாது என் அம்மா வீட்டுக்குப்போய் ஆறுமாத காலமாக நானும் பிள்ளைகளும் அல்லற்பட்டது போதும்.

ஆறுமாதமாக 'அவர்அவளை விட்டுவிட்டு வருவார். என்னைக் கூட்டிச்செல்வார்'' என்று காத்திருந்தேன், அவர் என்னைத் தேடி வரமாட்டார் என்று எனக்கு ஓரளவு நன்கு தெரிந்திருந்தும் ஒருவித நப்பாசையிலே காத்திருந்தேன்.

அவராகவா என்னை வீட்டிலிருந்துவிரட்டினார்? இல்லையே! நானாகத்தானே அவர் தடுக்கத் தடுக்க அவரை விட்டு அம்மா வீட்டுக்கு வந்தேன்.

மூப்பின் எல்லையை நெருங்கி விட்டிருந்த எனது தாய்க்குக் கிடைக்கும் விதவை ஓய்வூதியத்தைத் தவிர வேறுவருவாயில்லை, அந்த வருவாயிலேயே கடந்த ஆறுமாதமாக நானும் பிள்ளைகளும் வயிறுகழுவினோம்!

நான் என் கணவரைப் பிரிந்துசென்றவுடன் ஒரேஒரு மகளான என் செய்கையினை ஓரளவு வரவேற்ற என் தாய் கடந்த ஓரிரு மாதங்களாக ''பிள்ளை மனோ! கோபத்தை விட்டுவிட்டு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருதியும் உன் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் அவரிடம் போய்ச் சேர் பிள்ளை. ஒருமாதிரி விட்டுக்கொடுத்துத்தானே நடக்கவேணும் மனோ. நான் இன்னும் எத்தனை காலத்துக்கு உனக்குக் காவலாக இருப்பேனோ என்று எனக்கே தெரியாது. குஞ்சும் குருமான்களாயும் வைத்துக்கொண்டு தனியாக இருந்து. நீ ஒன்றுமே சரிக்கட்டிக்கொள்ளமாட்டாய்'' என்று அறிவுரை கூறத்தலைப்பட்டுவிட்டாள்.

இதற்கிடையில் தூரத்து உறவினர் என்று தன்னை அறிமுகப்படுத்தியபடியே நடராசா அண்ணை எனக்கு உதவி செய்ய முன்வந்தார்!

என் கணவரின் மேல் ஏற்பட்டிருந்த ஆத்திரம் இன்னமும் என் மனதில் இருந்து வந்ததனைப் பயன்படுத்தி அவருக்கு எதிராக வழக்குத் தொடரும்படியான நடராசா அண்ணையின் ஆலோசனையின் பேரில் தொடரப்பட்ட வழக்கின் முதல் தவணை நாளைக் காலையிலேதான்!

அண்ணையின் ஆலோசனையைக் கேட்டு அப்படி என் கணவருக்கு வழக்குத் தாக்கல் செய்தது எத்தனை பெரிய பிழை என்பதனை இப்போதுதான் நான் உணருகின்றேன்.

இந்த நடராசா அண்ணைக்கு ஊர் உலகத்தில் இதுதான் வேலையென்று பின்னர்தான் யாரோ கூறக்கேட்டேன்.

'முருகு'

அதோடு, அந்த நடராசா எனக்கு உதவிசெய்வதாக வந்தது, என்னுடைய இக்கட்டான நிலையிலிருந்து காப்பதற்காக அல்ல என்பதனை, அவரது சிரிப்பு, கதை, நடை, உடைகளிலிருந்தும் சில நாட்களாக என்னைத்தேடி நேரம் கெட்ட நேரங்களில் வீட்டுக்கு வருவதிலிருந்தும் இப்போதுதான் நான் உணருகின்றேன்.

எனது இந்த அனாதரவான நிலையைப் பயன்படுத்திக் கலங்கிய குளத்தில் மீன்பிடிக்கவே நடராசா முயலுகின்றார் என்பது இப்போதுதான் எனக்குத் தெளிவாகின்றது.

இன்னும் இந்த நடராசாவை நம்பியிருந்தால் என் கணவரிடமிருந்து என்னையும் பிள்ளைகளையும் நிரந்தரமாகவே பிரித்துத் தன் கனவை நனவாக்கிவிடுவார் போலிருக்கின்றது. அதன்பின் என்னைக் கணவர் என்றென்றும் ஏற்றுக் கொள்ளவே மாட்டாரே!

ஒரு பெண்ணுக்கு உயிரினும் மேலானது அது...! அதை நான் நடராசாவிடமிழந்தால் அதன்பின் எப்படி என் கணவர் என்னை ஏற்றுக்கொள்ளுவார்?

நடராசாவின் கோரப்பிடிக்குள் சிக்குவதற்கு முன்னதாகவே நான் என் காவலரான கணவரிடம் போய்ச் சேர்ந்துவிடவேண்டும்.

நடராசாவிடம் அகப்பட்டுக் கணவராலும் ஊராலும் பழிக்கப்பட்டு வாழ்வதிலும் பார்க்கக் கணவரிடம் போய் அவரது கையாலேயே சாகநேர்ந்தாலும் பரவாயில்லை. அது கண்டு ஊரார் என்னைப் பழிக்கவேமாட்டார்கள். ஆனால் என் கணவர் அப்படி ஒன்றும் செய்யவேமாட்டார். என்ன செய்வது? அவருக்கு இப்படியாகிவிட்டது!

ஜெயத்தின் விதவைத் தாய்க்குப் பென்சன் எடுத்து வந்து மாதத்தில் ஒருதடவை கொடுப்பது. இன்னும் சின்னச் சின்ன உதவிகள் என்று அவ்வப்போது உதவப்போன இடத்தில் என் கணவருக்கு இவ்விதமாக ஏற்பட்டுவிட்டது. சந்தர்ப்பம் சதிசெய்துவிட்டது,

அந்தப் பெண் ஜெயா கர்ப்பவதியாகிவிட்டபின், அவளின் விதவைத்தாய் அவளை வீட்டைவிட்டு விரட்டிவிட்ட

(9-ம் பக்கம் பார்க்க)

---

உருவகம்

# இரு நண்பர்கள்

மாரிகாலத்து மாலைப் பொழுது; வானம் இருளத் தொடங்கிவிட்டது. இடை இடையே கருமுகில் கூட்டங்களின் வழியே தெரிந்த நீல வானமும் முற்றாக மறைந்துவிட்டது. மரங்கள், செடிகள் அசைவற்று பிடித்து வைத்த பிள்ளையார்போல் நிற்கின்றன. உயரப் பறக்கும் புள்ளினம் எல்லாம் பதிவாகக் கூட்டம் கூட்டமாக ஏதோ ஒரு திசையை நோக்கி ஆபத்துவர இருப்பதை உணர்ந்ததைப் போல் பறந்துகொண்டிருக்கின்றன. பூமியின் மேற்பரப்பில் வெப்பம் அதிகரிக்கத் தொடங்குகின்றது. இதை உணர்ந்த ஊர்வனவெல்லாம் சுறுசுறுப்பாகி அங்கும் இங்குமாக ஓடித்திரிகின்றன. இவை எல்லாம் மழை வரப்போகின்றது என்பதைப் பறைசாற்றுகின்றன,

கால நிலை எப்படி இருப்பினும் தன் பொழுதை இன்பமயமாகக் கழிக்க நினைத்து தன்னைச் சீவிச் சிங்காரித்துக் கொண்டு தன் காதலியிடம் சென்றுகொண்டிருந்தது ஈசல். ஈசலின் காதலி வெகுதூரத்தில் உள்ள அரசமரத்தின்கீழ் அமைந்த புற்றில் தான் வசிக்கின்றாள். பயணத்தில் அரைவாசி தூரத்திற்குமேல் பறந்து வந்துவிட்டேன், சற்று இளைப்பாறிச் செல்வோம் என்ற நினைவுடன் பசும் புல்தரையில் அமர்ந்த ஈசல், ஈச் ஈச் என்று மென்மையான இனிய குரலில் அன்புடன் யாரோ அழைப்பதை உணர்ந்து சுற்றும் முற்றும் நோக்கியது. தன் அன்பு நண்பன் எறும்பு ஏதோ ஓர் உணவுப் பொருளை மிகவும் சிரமப்பட்டு தன் அருகே இழுத்துவந்துகொண்டிருந்தது. ''நண்ப! கண்டு அதிக நாளாகிவிட்டது. எங்கே ரொம்பத்தூரம்பறந்துகளைத்து விட்டாய்போல் இருக்கின்றது. இதோ உணவுப்பண்டம், உண்டு இளைப்பாறு'' என்று கூறி தன் நண்பன் உண்டு மகிழ்வதை தான் உண்டு மகிழ்வதைப்போல் ரசித்துக் கொண்டிருந்தது. நண்பன் உணவருந்தி முடிந்ததும் நண்ப! பெருமழை வரப் போகின்றதுபோல் இருக்கின்றதே, எங்கே புறப்பட்டுவிட்டாய்? பேசாமல் வீடு திரும்பி மாரிகாலத்தை சுகத்துடன் கழிப்பதற்கு வழி வகுப்பாயாக: என்று அன்புடன் எறும்பு வேண்டியும் ஈசல் அதற்கு செவிசாய்க்காமல் ''அன்ப என் காதலியை காணாமல் என்னால் இருக்கமுடியாது. தயவுசெய்து என்னை தடுக்காதே! உனக்கு என் நன்றிகள் உரித்தாகட்டும்'' என்று கூறிக்கொண்டே பசும்புல் தரையை விட்டு, காதலியின் இருப்பிடத்தை நோக்கிப் பறக்கத்தொடங்கிவிட்டது ஈசல்.

எறும்பு தனக்கு பல நாட்களுக்கு தேவையான உணவை அருகில் உள்ள இடங்களில் இருந்து தன் இருப்பிடத்துக்கு எவ்வளவு விரைவாக கொண்டு வரமுடியுமோ அவ்வளவு கெதியாக கொண்டுவந்து சேர்த்துவிட்டு தன் இருப்பிடத்தின் நுழை வாயிலைச்சுற்றி வெள்ளம் தன் இருப்பிடத்திற்குள் நுழையாமல் அணைகட்டி முடிக்கவும் பெருமழை அடிக்கத் தொடங்கவும் சரியாக இருந்தது. அப்போதும்கூட எறும்பு, தன் நண்பன் ஈசலைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தது

பெருமழை தன் இயல்பைக் காட்டிவிட்டது. சில வினாடிகளில் மழை ஓய்ந்துவிட்டது வானம் வெளித்துக்கொண்டிருந்தது. காற்று வீசத்தொடங்கியதால் மரங்கள் அசையத் தொடங்கிவிட்டன. இதனால் இலைகளின் மேற்பரப்பில் ஒட்டியிருந்த நீர்த்துளிகள் மெல்ல மெல்ல சொட்டிக் கொண்டிருந்தன. இனி மழை பெய்யமாட்டாது என்பதை ஏதோ ஓர் உணர்வு எடுத்தியம்ப எறும்பு தன் நண்பன் ஈசல் சென்ற திசையை நோக்கி, தேடிச்சென்றுகொண்டிருந்தது பாதை சீர்கெட்டிருந்தது. அங்கும் இங்குமாகக் கிடந்த பள்ளங்களில் நீர் தேங்கி இருந்தது. எறும்புக்கு ஊர்ந்து செல்வது மிகவும் சிக்கலாக இருந்தது. சில இடங்களில் நீந்திச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. சில சமயங்களில் நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சருகில் ஏறி எதிர்க்கரையை அடையவேண்டி . இருந்தது. இப்படியான இன்னல்கள் இருந்தபோதிலும் வெற்றிகரமாகத் தன் உயிர் நண்பனைத் தேடி முன்னேறிக்கொண்டிருந்தது எறும்பு?

வானம் முற்றாக வெளித்துவிட்டது. முழு நிலா தோன்றி வெள்ளி போன்ற ஒளிக் கதிர்களை வீசி இருள் என்ற அரக்கன் மீது தன்னிச்சையாக ஆட்சிசெய்துகொண்டிருந்தது. நிலவின் ஒளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பசும்புல் தரையின் மேல் சிதறிக்கிடக்கும் நீர்த்துளிகள் வைரமணிகள் போல் டால் அடித்துக் கொண்டிருக்கின்றன இப்படி இனிமையான சூழலிலும் எறும்பின் மனம் ஈசலைப் பற்றி நினைத்துத் தத்தளித்துக்கொண்டிருந்தது. அதோ ஈசலின் காதலி வசிக்கும் அரசமரம் மங்கலாக எறும்பின் கண்களுக்குத் தோன்றுகின்றது எறும்போ முடுக்கி விடப்பட்ட இயந்திரம்போல் வேகமாக அரசமரத்தை நோக்கி அசைகின்றது.

யாரோ தன்னை ஈனக்குரலில் அழைப்பதுபோல் இருந்தது. சற்று உற்றுக்கேட்ட எறும்பு தன் நண்பன் ஈசலின் குரல்போல் இருப்பதைக் கண்டு அவ்விடம் விரைந்தது. அந்தோ பரிதாபம். தன் உயிர் நண்பன் அல்லவா குற்றுயிரும் குறையுயிருமாக இருக்கின்றான். மழைத்துளியால் சிறகுகள் நனைந்து மேலும் பறக்கமுடியாமல் கீழே சிறு பள்ளத்திலுள்ள நீரின் மேல் விழுந்து தன் உயிரைக் காப்பாற்றப் பெரும் பாடுபட்டு மயக்க நிலையில் இருக்கின்றான்.

பள்ளத்திலுள்ள நீரை மண் உறிஞ்சிவிட்டது இத்துடன் சேர்த்து ஈசலின் உயிரையும் குடித்துவிட்டது போலும். ஐயோ அன்ப உனக்கா இந்த நிலை? என்று கதறியபடி தன் முன் கால்களால் ஈசலின் தலையை வருடியது, தன் நண்பன் அருகில் இருப்பதை உணர்ந்த ஈசல, தன் உடலிலுள்ள பலத்தையெல்லாம் ஒன்றுபடுத்தி ' அன்ப, நான் என் காதலியை கடைசியாகப் பார்க்க ஆசைப்படுகின்றேன். என்னுடைய இறுதி ஆசையை தயவுசெய்து நிறைவேற்றி வைப்பாயா?'' என்று மன்றாட்டத்துடன் கேட்டுக்கொண்டு மயக்க நிலையை அடைந்துவிட்டது ஈசல். தன் நண்பனின் இறுதி ஆசையைப் பூர்த்திசெய்ய நினைத்து, ஈசலின் காதலி வசித்த அரசமரத்தடி புற்றை நோக்கி விரைந்த எறும்பு, அங்கே அவளைக் காணாமல் அங்கும் இங்கும் தேடி அலைந்து இறுதியில் அருகே உள்ள மின்கம்பத்து ஒளியில் அவள் சில ஆடவருடன் கூடிக்களிப்புற்று இருக்கக்கண்டு அருகே, சென்று அவளைப் பலமுறை கூவி அழைத்தும் அவள் எறும்பைக் கண்டும் காணாததும்போல் இருந்தது மட்டுமல்லாமல் எறும்பு விடுத்த அழைப்புக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டாள் அக்கொடியவள். நண்பனை நினைத்துத் துயர் ஒருபுறமாகவும் அவனின் காதலியை நினைத்து வெறுப்பு ஒருபுறமாகவும் செய்வதறியாமல் கவலையுடன் நண்பனிடம் சென்று நடந்ததைக் கூறி அவனை இன்னும் இக்கட்டான நிலைக்குக்கொண்டுவர விரும்பாமல் அவனைத் தன் கரங்களால் அன்புடன் வருடியபடி கண்கள் குளமாக, அன்பு நண்பன் அருகில் மௌனமாக நின்றது எறும்பு. தன் அருகில் யாரோ வந்து நிற்பதையும் தன்னை யாரோ வருடிக்கொண்டிருப்பதையும் உணர்ந்த ஈசல் தன் கண்களைத் திறந்து பார்த்தது. அருகே நண்பன் மட்டும் இருப்பதைக் கண்டு, என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு புன்சிரிப்பை உதிர்த்தபடி நண்பனின் கையைப் பிடிக்க முயன்றும் முடியாமல் போய்விட்டது. அது வயிற்றையும் நெஞ்சையும் ஒரு முறை எக்கிக்கொண்டது. ஐயோ பாவம்! இப்படிப் பட்ட பரிதாப மரணம் என்று கலங்கிய எறும்பு அவனின் பிரேதத்தை அடக்கம் செய்து, தன் இறுதிமரியாதையைச் செலுத்த நினைத்து அதன்படி செயல்படவும் தொடங்கியது அருகிலிருந்த மண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துத் தன் உமிழ் நீரில் நனைத்து ஒரு பெரிய மண்புற்றைக் கட்டி எழுப்பியது தான் எடுத்துக் கொண்ட விடயம் முற்றுப் பெறும்வரை அதாவது சமாதி கட்டி முடியும் வரை எறும்பு சிறிதளவும் ஓய்வுபெறவில்லை. காதலர்கள் தங்களுக்காகக் கட்டிக்கொள்ளும் தாஜ்மகால்களையும் அன்றேல் அரசர்களுக்காக கட்டியெழுப்பப்படும் பிரமிட்டுகளையும்விட நட்பின் பெருமையை இந்தச் சிறிய எறும்பு தன் சுய முயற்சியால் துலக்கக் கட்டி எழுப்பிய மண்புற்று எவ்வளவோ சிறந்ததல்லவா?

(யாவும் கற்பனை)

'சவீது

# செல்வம் வெளியேறுவதை ஓமானியர் விரும்பவில்லை

## அங்கு தொழில் புரியும் இலங்கையர் கூறுகிறார்

சந்திப்பு: ஆ. சிவஞானம்

அந்நிய நாட்டு மக்கள் தமது செல்வத்தை வெளிக் கொண்டுசெல்வதை உணர்ந்து விட்ட ஓமானிய மக்கள், அதனைத்தடுத்து நிறுத்த சகல வழிகளிலும் முயன்றுவருகின்றார்கள். இம்முயற்சி அவர்கள் தம் நாட்டின் மீது கொண்ட பற்றுதலை எடுத்தியம்புகின்றது, இத்தகைய தேசிய உணர்வு அதிகரித்து விட்ட படித்த ஓமானியப் பிரஜைகள், தாம் பிறநாடுகளில் வாழ்வதை விரும்பாது தாயகத்தில் உழைக்க முன் வந்துள்ளார்கள். ஓமானிய மக்களின் இத்தகைய உணர்வு பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

அரபுநாடுகளில் ஒன்றாக விளங்கும் ஓமானின் சலாலா பிரதேசத்தில் அரசாங்க கட்டிடப் பகுதியில் கடமையாற்றும் கரவெட்டி நுணுவிலைச் சேர்ந்த பொறியியல் உயர் அதிகாரி திரு. ஆ. ஞானத் தணிமுதல்வன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இரண்டு மாத கால விடுமுறையைக் கழிப்பதற்காக வந்திருக்கும் அவரைச் சந்தித்து, ஓமானிய மக்களைப் பற்றி அறிய விரும்புவதாகத் தெரிவித்தேன்! எனது விருப்பத்தை ஏற்று அவர் கூறியவை ஓமானிய மக்களைப் படம்பிடித்துக் காட்டுவதாய் இருந்தது. அந்நாட்டு மக்களின் வாழ்கை முறையும் நடவடிக்கைகளும் எமக்கும் சில படிப்பினைகளைத்தரலாம் எனக் கருதுகின்றேன்.

### மனோநிலையும் முயற்சியும்

உலகத்தை சுரண்டி வாழ்ந்த வெள்ளையர்களும் பாகிஸ்தானியரும் ஓமானின்செல்வத்தை அள்ளிக்கொள்கின்றார்கள் என ஓமானிய மக்கள் கருதுகின்றார்கள். பிறநாட்டவர்முதலீடுகளைச் செய்வதன் மூலமும் நிர்வாகப்பதவிகளைவகிப்பதன் மூலமும் தமது நாடு சுரண்டப்படுவதாகவும் எண்ணும் ஓமானிய மக்கள் அதனை தடுத்து நிறுத்துவதற்காக உயர் நிர்வாகப் பதவிகளைக் கைப்பற்றவும், முதலீடுகளைச் செய்யவும் ஆரம்பித்துவிட்டார்கள். கல்வியறிவு அற்று வாழ்ந்தமையினால்தான் தாமும் நாடும் இந்நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை உணர்ந்து கல்வியறிவினைப் பெற முயற்சி செய்கின்றார்கள். நாட்டின் தலைநகரான மஸ்கட்டில் உயர் கல்வி நிறுவனங்களை அமைத்தும், உள்ளூர்களில் சிறு சிறு பாடசாலைகளையும் அமைத்துக் கல்வியறிவு ஊட்டப்படுகின்றது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளுகின்றார்கள்.

வேலைத்தளங்களில் ஏழு மணி நேரம் உழைக்கும் ஓமானியர் சாதாரணதொழில் மட்டத்திலும் தமது நிலையைப் பேண மறப்பதில்லை. 50 வீதத்திற்குக் குறையாது தமது நிலையைப் பேணிக் கொள்கின்றார்கள். கிராமப்புற மக்கள் கல்வியறிவில் பின்தங்கியுள்ள போதிலும் வெளிநாட்டவர்க்கும் நண்பர்களுக்கும் மற்றையோர்க்கும் மரியாதை செலுத்தியும் விருந்துபசாரங்கள் வழங்கியும் கௌரவிக்கின்றார்கள். சாதாரணமாகப் பலகைகளால் அமைக்கப்பட்ட வீடுகளில் வசிக்கும் மக்களும், கூடாரங்களில் வசிக்கும் மக்களும் மேற் கூறப்பட்டதற்கு விதிவிலக்கானவர்களல்லர்.

### மன்னனும் மக்களும்

இந்நாட்டு மன்னன் சுல்தான் என அழைக்கப்படுகின்றார். இவரின் ஆட்சியின்கீழ் ஐபேரிஸ், டோபர், பிளாக்கீஸ், சான்சிபாரிஸ் போன்ற இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். ஐபேரிஸ், டோபர் என்ற இன மக்கள் ஓமானின் ஆதிவாசிகளாவர். பிளாக்கீஸ், சான்சிபாரிஸ் போன்றவர்கள் ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவர்களின் சந்ததியினராவர். தற்போது ஆட்சியில் இருக்கும் சுல்தானின் தந்தையின் காலத்தில் இவர்களின் சந்ததியினர் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டதாக ஓமானிய மக்கள் பேசிக்கொள்கின்றார்கள். இச் சந்ததியினர்க்குத் தற்போதய சுல்தான் குடியுரிமைகளை வழங்கி சுதந்திரமான இனங்களாக வாழவழி வகுத்துள்ளார். எந்தவிதமான வேறுபாடுகளும் மன வேற்றுமைகளும் இன்றி பல சமூகமக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்துவருகின்றார்கள்.

மக்களை சுல்தான் அடிக்கடி சந்தித்து வருகின்றார். சாதாரண பொதுமக்களுடனும் சுல்தான் மகிழ்ச்சியாக அளவளாவிக்கொள்கின்றார். மக்களைச் சந்திப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விமானங்கள் மூலமும் மற்றும் தரைப் போக்குவரத்துச் சாதனங்கள் மூலமும் பிரயாணம் மேற்கொள்ளுகின்றார். மக்களுடன் சுல்தான் பழகும் விதமும், அவர் நாட்டு வளர்ச்சியில் காட்டிவரும் ஆர்வமும் மக்கள் அவரைத் தெய்வமாகக் கருதிக்கொள்ள வைத்துள்ளது. ஓமானிய மக்கள் மன்னனைத் தெய்வமாகவே கருதி செயற்படுவதனால்தான் நாடும் துரித வளர்ச்சி அடைகின்றது.

### உணவும் குடியும்

என்றும் கலகலப்பாகப் பேசி வாழ்ந்துவரும் ஓமானிய மக்கள் தமது உணவிற்காக வெள்ளை அரிசியை உபயோகித்துக்கொள்ளுகின்றார்கள். இறைச்சிவகைகளைப் பெருமளவில் உண்ணும் இந்நாட்டு மக்களில் ஒரு சிலர் குறிப்பாகக் கடற்கரைப் பகுதியில் வாழுவோர் மீன் வகைகளையும் சாப்பிடப்பழகிக்கொண்டுள்ளார்கள். கிழங்கு வகைகளையும், பருப்பு வகைகளையும் உண்ணும் இந்நாட்டவர் கோவா, கததரிக்காய் போன்றவற்றையும் சமைத்து உண்கின்றார்கள். ஓமானில் எமது நாட்டிலுள்ள விற்பனைத் திணைக்களக் கடைகள் போன்ற அமைப்புகளுண்டு. இந்நிறுவனங்களிலேயே இவ்வகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. வாழைப்பழங்கள் முன்னைய காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டு வந்ததாயினும் தற்போது ஓமானில் பல வாழைத் தோட்டங்கள் காணப்படுகின்றன. இலங்கை நாணய பெறுமதியின்படி ஒரு வாழைப் பழத்தைக் கொள்முதல் செய்வதற்கு ஒரு ரூபா செலவாகும். அரைவேக்காட்டில் உணவுவகைகளை உண்பதையே ஓமானிய மக்கள் பெரிதும் விரும்புகின்றார்களென்பதையே இந்நாட்டு மக்களின் உணவைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்.

இந்நாட்டு மக்கள் மது பானங்கள் அருந்துவது கிடையாது. ஆனல் வெளி நாட்டவர்க்கு அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் அருந்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. மதுமானம் அருந்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பிரதேச ஆட்சித் தலைவரான 'வாளி'யிடமிருந்தே பெற்றுக் கொள்ளமுடியும். சுல்தானின் கீழுள்ள ஒவ்வொரு 'வாளி'க்கும் குறிப்பிட்ட பிரதேசத்தில் நடைபெறக்கூடிய கருமங்கள் அனைத்திற்கும் வாளியின் அனுமதியும் சம்மதமும் பெற்ருகவேண்டும். குறிப்பிடத்தக்க வருமானத்தை உடையவர்களுக்கே மது பானம் அருந்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வாளி வழங்குவார்.

### வங்கிப் பழக்கம்

உலக நாடுகளின் வளர்ச்சிக்கேற்ப தாமும் வளர்ச்சி அடையவேண்டுமென்ற கருத்தினைக் கொண்ட இந்நாட்டு மக்கள் வங்கிப்பழக்கத்தையும் கைக்கொண்டுள்ளார்கள். குறிப்பாகக் கல்வி அறிவு கொண்டவர்களும், நிதிவசதி படைத்தோரும் வங்கிப்பழக்கத்தை அதிகமாகக் கொண்டுள்ளனர். அரசாங்கக் காரியாலயங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் வங்கிகளில் வாடிக்கையாளராக உள்ளனர். கிராமத்தினைச் சேர்ந்த மக்களில் குறிப்பிடத்தக்களவு மக்கள் வங்கிப் பழக்கத்தை உடையவர்களில்லை. காரணம் என்னவென்றல் அம்மக்களில் அதிகமானோர் இன்றும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வருவது தான். ஆடு, மாடுகளையும், ஒட்டகங்களையும் மேய்க்கும் இந்நாடோடிகள் சென்ற சென்ற இடங்களில் எல்லாம் தங்கி வாழுகின்றார்கள். கூடாரங்களில் சிலர் வாழுகின்ற நேரத்தில் பலர் மரங்களுக்குக் கீழும் வாழும் நிலையையும் ஓமானின் கிராமப்புறங்களில் காணக்கூடிய காட்சியாகும். இந்நாடோடிகளுக்கு அரசாங்கம் சில வீட்டு வசதிகளையும் அமைத்துக் கொடுத்து கல்வி வசதியையும் இலவசமாகக் கொடுத்துதவுகின்றது.

### துப்பாக்கி சர்வசாதாரணம்:-

ஒவ்வொரு நாட்டின் ஆயுதப் படைகளில்மட்டுமே சர்வ சாதாரணமாக துப்பாக்கிகள் வைத்திருக்கின்றார்கள். ஓமான் தேசத்து மக்களிடமும் அதே போன்று துப்பாக்கிகள் கைவசம் உண்டு. சிறியவர் முதல் பெரியவர்கள்வரையும், படித்தவர் படியாதவர்களிடமும், நிதியுடையோர்-அற்றோரிடமும் காணக்கூடிய ஒரே பொருளாக இந்நாட்டில் துப்பாக்கிகள் மிளிர்கின்றன. பாடசாலை செல்லும் மாணவர்களாக இருந்தால், பாடசாலை செல்லும் நேரம் தவிர்ந்த வேளைகளில் துப்பாக்கிகளை உடலின் ஒரு பாகத்தில் தொங்கவிட்டிருப்பார்கள். அரசாங்க காரியாலய ஊழியர்களும் வேலை நேரம்தவிர்ந்த நேரங்களில் துப்பாக்கியுடன் காணப்படுவார்கள். இவர்கள் ஏன் இப்படியாகத் துப்பாக்கிகளைக் கைவசம் வைத்திருக்கின்றார்கள் எனக் கூற முடியவில்லை. வெளிநாட்டு மக்கள் இந்நாட்டு மக்களை முதலில் சந்திக்கும்பொழுது பெரிதும் அச்சமடையக்கூடியதாகவுள்ளது. ஆனல் இவர்கள் இத்துப்பாக்கிகளை உபயோகித்து தம் முள்சண்டை பிடித்துக்கொண்டது கிடையாது, அப்படிக் கதைத்துக் கொண்டிருப்பதுமில்லை எனலாம்.

### தடை முகாம்களும் மக்களும்

இடத்திற்கு இடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் இந்நாட்டில் தடைமுகாம்களை அரசாங்கம் அமைத்துள்ளது. ஓமானிய பொலிசார் இத் தடை முகாம்களில் கடமையாற்றிவருகின்றபொழுதிலும் இராணுவத்தில் கடமையாற்றுவது கிடையாது. மக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்கள் பெரிதும் உன்னிப்பாகப் பரிசோதனை செய்யப்படும். மக்களும் எந்தவித எதிர்ப்பும் கிளர்ச்சியுமின்றி சோதனைக்கு அனுமதிக்கின்றார்கள். இத தடைமுகாம்களில் நடைபெறும் சோதனைகள் வெளிநாட்டுத் தீயசக்திகள் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துவதைத் தடை செய்வதற்காகவே என மக்கள் எண்ணிக்கொள்கின்றார்கள்.

### உதைபந்தாட்டமும் பொழுதுபோக்கும்

உதைபந்தாட்டத்தைப் பெரிதும் விரும்புகின்ற இந்நாட்டு மக்கள், அதனையே தேசிய விளையாட்டுக்களில் ஒன்றாகவும் வைத்துள்ளார்கள். இந்நாட்டின் சகல பாகங்களிலும் உதைபந்தாட்ட நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்றுவருவதைக் காண முடியும், தலைநகரான மஸ்கட்டிலும் ஏனைய நகரங்களிலுமுள்ள டெலிவிஷன் நிலையங்கள்மூலம் உலகத்தில் நடைபெறுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த உதைபந்தாட்ட நிகழ்ச்சிகள் மக்களுக்குக் காண்பிக்கப்படும், அண்மையில் உலக வெற்றிக்கிண்ணத்திற்காக நடைபெற்ற உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மூன்று நாட்கள் டெலிவிஷன் நிலையங்கள் காட்டியது. இதிலிருந்து இந்நாட்டு மக்கள் உதைபந்தாட்டத்தில் கொண்ட ஈடுபாட்டையும் பற்றுதலையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

கதைத்துப்பேசி இன்புறுவதையே இந்நாட்டு மக்கள் பெரும் பொழுதுபோக்காகக் கருதுகின்றார்கள். எப்பவும் கலகலப்பாகக் கூட்டங்களிலிருந்து பொழுதுபோக்குவதனை அவதானிக்கக்கூடியதாயிருக்கும். சாலாலா பிரதேசத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக இருந்து, தேநீர் போன்றவற்றை அருந்தியும், உணவு வகைகளை உண்டும், கதைத்துப் பேசி இன்புறுவதை எவரும் எப்பவும் காணமுடியும். இக்கூட்டத்திலிருக்கும் மக்கள் பாட்டுக்கள் பாடியும் வருவார்கள். மொத்தமாகச் சொல்லப்போனல் ஓமானிய மக்களுக்குக் கதையென்றல் ஒரே குஷி எனக் கூற முடியும். ஆங்கில, இந்திமொழி பேசும் படங்கள் காண்பிக்கப்படுகின்றன. சினிமா அரங்குகளின் தொகை மிகவும் குறைவானதாக உள்ளது. டெலிவிஷன் மூலமும் சினிமாக்கள் காண்பிக்கப்படும் பழக்கமும் உண்டு. பொழுதுபோக்குச் சாதனமாக மற்றைய நாடுகளைப் போன்று பத்திரிகைகள் இங்கும் காணப்படுகின்றன. வெளிவரும் பத்திரிகைகளின் தொகை அளவில் குறைந்த தொகையினதாகும். வெளிநாட்டு மக்கள் தமக்கு வேண்டிய பத்திரிகைகளையும் சஞ்

(9-ம் பக்கம் பார்க்க)

---

# பலதும் பத்தும்

ஜீவா

### ஆசியாவின் அற்புத மனிதன்

ஆடல், பாடல், நடிப்பு, நகைச்சுவை எந்த ஒரு வாத்தியக் கருவியை இசைக்கும் தனித்தன்மை, சீட்டுக்கட்டுகளில்பலவிதமாயாஜாலவித்தைகள், கண்ணைக்கட்டிக்கொண்டு காரோட்டுதல் போன்ற பல விநோதங்கள் புரியும் 'ஆசியாவின் அற்புத மனிதன்' என வர்ணிக்கப்படும் சிங்கப்பூர் டெலிவிஷன் கலைஞரான சிங்கப்பூர் சிறீ பெரேரா தற்போது நம்நாட்டில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார். இவரின் முன்னோர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்து முப்பது வருடங்களாக வாழ்ந்த சிறீபெரேரா ஸ்ரீலங்காவைத் தாயகமாகக்கொண்டுவிட்டார். தன் குரு இந்தியாவில் தான் இருக்கிறர் என்று பெருமையுடன் கூறும் சிறீ பெரேரா திரைப்படங்களிலும் மேடைநிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி வருகிறர்.

### நம்பினல் நம்புங்கள்

- மலேசியாவிலுள்ள ஒரு வகை மீன், மரங்களின்மீது ஏறுகிறதாம்!
- 1793-ம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தை நெற்றிக் கண்ணுடன் பிறந்தது!
- 1869-ம் ஆண்டில் பெர்ட்டினன்ட் என்பவர் சூயஸ் கால்வாயை வெட்டினர்.
- கடலிலே வாழும் மீன் இனங்களில் மிகவும் வேகமாக நீந்தக்கூடியது சுரு மீன்.
- பூக்களில் இரண்டு கோடிவகை உண்டு. ஆனல் கறுப்புநிறம்மாத்திரம் இல்லை.

### மகாகவிக்கு மணிமண்டபம்!

1930ம் ஆண்டு ஜூலை 30ம் திகதியன்று லண்டனிலிருந்து வெளியான பிரபல தினசரியொன்றில் இடம்பெற்றிருந்த ஒரு படத்துக்கு மேலே பின்வரும் குறிப்பு காணப்பட்டது.

''கவிஞர் பைரனின் நாய்க்கு இப்படி ஓர் அற்புதமான கல்லறை கட்டப்பட்டிருக்கிறது. மகாகவி பைரனுக்கு கூட இத்தகைய சிறப்பான கல்லறை கிடையாது''

இதைப் பார்த்து லண்டனிலுள்ள மாணவ மாணவிகளுக்கு வேதனையும் ஆத்திரமும் ஏற்பட்டது. அதன் காரணமாக நிதிதிரட்ட ஆரம்பித்தார்கள். திரட்டிய நிதியின் மூலம் மகாகவி பைரனுக்கு மாபெரும் மணிமண்டபமே எழுப்பிவிட்டார்கள்.

### ஆயிரத்தில் ஒரு வார்த்தை

உன் நாவுக்கு விலங்கிடு, இன்றேல் அது உனக்கு விலங்கிட்டுவிடும்.

— லத்தீன் பழமொழி.

## தெல்லிப்பழை
## துர்க்காதேவி ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா மலர்

# ஆலயத்தின் புராதனச் சிறப்பும் இன்றைய நிலையும்



செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(நிர்வாக சபைத்தலைவர்)

தேவிக்குரிய பல்வேறு மூர்த்தங்களில் துர்க்கா மூர்த்தம் மிக உன்னதமானது; சர்வ ஆற்றலுந் தன்பாற் கொண்டுள்ளது; 'துர்க்கா' என்ற மந்திரமே தன் ஓசையாலும் பொருளாலும் மேன்மை பெற்று விளங்குவது. இதன் ஓசை மிக மிக உரம் வாய்ந்த ஓர் ஓசையாகும். அடைதற்கரியவள் என்பது இம்மந்திரத்தின் பொருள். அழித்தற் சக்தி முழுவதும் இம் மூர்த்தத்திலேயே அமைந்துள்ளது. நம் சமய வரலாற்றின்படி துஷ்டர்களாய் விளங்கிய அனைவருந் துர்க்காதேவியால் அழிக்கப்பெற்றுள்ளார்கள். துர்க்கன் என்ற பெயருள்ள அசுரனொருவன் இத்தேவியால் அழிக்கப்பெற்றுள்ளான். அந்நிகழ்ச்சி துர்க்கா என்ற பெயரைப் பிரபல்யப் படுத்திக்கொண்டிருக்கின்றது. அன்றியும் மகிஷாசுரன் என்ற அசுரன் ஒருவனும் இத்தேவியால் அழிக்கப்பெற்றுள்ளான், மகிஷாசுரமர்த்தனி என்ற பெயர் அதனாலேயே தேவிக்கு ஏற்படுவதாயிற்று. வருடா வருடம் நடைபெற்றுவரும் மானம்பு நிகழ்ச்சி இன்றும் அதனைப் பிரபல்யப்படுத்திவருகின்றது.

### பேராற்றல்

ஆற்றல் என்ற ஆற்றல்களுளெல்லாம் அழிககுப ஆற்றலே பேராற்றல் எனப்படும். ஆக்கும் ஆற்றல், காக்கும் ஆற்றல் எல்லாம் அவ்வாற்றல் வாய்ந்தவர்க்குமட்டுமே உண்டு. அழித்தல் என்பது சங்காரம் என்றும் சொல்லப் படும். சர்வ சங்கார காரணனாய்த் திகழ்பவர் சிவபெருமான். அவரிடத்திருந்து கொண்டு சர்வ சங்கார காரணியாய்த் திகழும் பராசக்தியே துர்க்காதேவியாவாள். சர்வ ஆற்றலுக்கும் சர்வ கருணைக்கும் அவளே இருப்பிடமாவாள்.

"தாயே துர்க்காதேவி! நீயே கருணைக்கடல். ஆனல் நான் ஆபத்தில் அழும்போது தான் உன்னை நினைக்கின்றேன். இதை நான் வஞ்சகமாகச் செய்யவில்லை. பசி தாகத்தினல் உணவும் நீருந் தேவைப்படும்போதுதானே சிறு பிள்ளைகள் தங்கள் தாயை நினைக்கின்றனர்."

—தேவி தோத்திரம்.

இவ்வளவு பரிவாக ஓர் அன்பர் தேவியிடத்தில் முறையிட்டுக்கொள்கிறர். இப்படியே நாமும் பரிந்து வேண்டினல் இரங்கக்கூடியவள் துர்க்காதேவி. இரங்கவேண்டியவளும் அவளே!

### ஒரே ஒரு ஆலயம்

துர்க்கை கோயிலின் அருமையும் பெருமையும்:—

இன்று நமது ஈழநாட்டில் சிறியனவும் பெரியனவுமாக ஏறக்குறைய இரண்டாயிரம் சைவாலயங்கள் உள்ளன. ஒவ்வொரு தெய்வத்தின் பெயரிலும் பல்வேறு ஆலயங்கள் இவற்றுட் காணப்படுகின்றன. இவ்வளவிற்குள்ளும் துர்க்கா தேவிக்கு ஒரேயொரு ஆலயம் மட்டுமே இவ்விலங்கையில் உண்டென்பது வியப்பிற்குரியதாகும். அதுவும் நம் வாழ்பதியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அமைந்திருத்தல் நம்மவர்க்குப் பெருமையும் பெருமகிழ்வும் விளைப்பதாகும். யாழ்ப்பாணத்திலும் மூர்த்தி, தல, தீர்த்த விசேடம்வாய்ந்த வலிகாமம் வடக்கிலே; வலிகாமம் வடக்கிலும் புராதன சரித்திரப் பெருமைவாய்ந்த தெல்லிப்பழையிலே, தெல்லிப்பழையிலும் காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பெருந்தெருவின் ஓரத்திலே அங்கும் போதிய இட விசாலப் பரப்புள்ளதாகிய உழுகுடைப்பகு

(6ம் பக்கம் பார்க்க)



## நாளைதேர் வெள்ளோட்டம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்காக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை நடைபெறுகின்றது. அதையொட்டி இச் சிறப்பிதழ் வெளியாகின்றது.

## ஸ்தபதியாரின் வாழ்த்துரை

ஈழநாட்டிலேமுதன்முதலாக முகபத்திர வேலைகளுடன் அமைக்கப்பெற்றுள்ள திராவிட மரபுத் தேர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியின் தேராகும். இது ஒரு புது மோடியானது. வேற்றுமையான சிறப்புக்கள் விதிவிலக்காது அமையின் ஆக்கத்திறன் சிறப்பெய்தும். உபபீடம் தொடங்கும் அதிஷ்டாமை (காபோதகம்) ஆனைத் தொட்டிப்பார். கொடிஞ்சி, பிரஸ்தானம், விமானம், ஈருக கலசம் வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப் பெற்றுள்ளமையினல் சிறந்த லயச் சிறப்பு ஏற்படுகின்றது.

அக்கினி போன்ற நிறமுடையவளும் பதினெட்டுக்கைகளை உடையவளுமாகிய ஆதிசக்தியாகிய ஸ்ரீ துர்க்காதேவி வீற்றிருக்க எட்டுத் துர்க்கைகயும், தாமரை வடிவினலாக தேர்களில் எட்டுத் திக்குகளிலும் இருந்து அருள்பாலிக்கின்றனர் என்று நவ துர்க்கைகளின் தத்துவங்களை "ஸ்கந்தபமாலா" என்ற நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. இக்கருத்தை அனுசர்த்து ஆகாயத்தைக் குறிக்கும் சிங்காசனத்தில் இருந்து எட்டுக்கோணக்களுக்கும் எட்டுச் சிங்கங்களை அமைத்து அச்சிங்காசனத்தில் ஆதிசக்தியாகிய ஸ்ரீ துர்க்காதேவி வீற்றிருந்து திருவருள் பாலிக்க தேரின் அதில் டானமாகிய காபோதகப் பாரிலே அட்டதிக்குகளிலும் திக்குப் பாரகர்களை அமைத்துள்ளமையும் சிறப்பம்சமாகும். இவற்றைவிட இருபத்தெட்டு சிற்ப வகைகள், யாழிவரிமானங்கள், குதிரை வரிமானங்கள், நான்குமறைகளைக்குறிப்பிடும் நான் குதிரைகள், பிரமன் ஆகிய சிற்ப அம்சங்களும், கலை நுணுக்கங்கள் நிறைந்த வேலைப்பாட்டுடனும் இச் சித்திரத்தேர் பூரண பொலிவுடன் நிறைவெய்திட திருவருள் பொலிவு நிறைந்த ஸ்ரீ துர்க்காதேவி அருள்பாலித்துள்ளார்.

கௌரவ ஸ்தபதி கலாகேசரி
**ஆ. தம்பித்துரை,**
(துர்க்காதேவி ஆலயச் சித்திரத்தேரை உருவாக்கியயர்)

## அன்னை அருளால் அழகாய் நடைபெறுக!

ஊரெல்லாம் கோயில்; உணர்வெல்லாம் தெய்வபக்தி
நீரெல்லாம் தீர்த்தம்; நிழலெல்லாம் மண்டபங்கள்;
ஊரில் விழாக்கள் உயர்தெய்வம் போற்றுகின்ற
சீர்விழவே, அந்தத் திருவிழாத் தம்முள்ளே
தேர்விழா என்ருல் சிறப்பாம்; பொதுமக்கள்
நேரிலே கண்டு நிறையின்பம் கொள்விழா;
கோயிலுக்குள் செல்லாக் குலத்தினரும் ஆசையுடன்
தோயுமன்பி ளேடுவடம் தொட்டிழுக்கச் செய்
விழாவாம்:
எல்லார்க்கும் ஈசன் பொதுவென்னும் எண்ணத்தை
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நாட்டும் தனிவிழா
இந்த விழாவைப் பிரமோற் சவமென்றே
முந்தையோர் செப்புவார்; முன்னுளில் வீதிகளைத்
தேரோடும் வீதியெனச் செப்பிச் சிறப்பிப்பார்;
கீர்த்தி யுறுமிலங்கைத் தீவில்தெல் லிப்பழையில்
துர்க்கையம்மன் கோயில் சுடர்ந்து விளங்கும்; அங்கே
சொர்க்கமே வந்ததுபோல் தோற்றம் அளிக்கின்ற
தேரை வனைந்தார்கள்; கீர்த்திமிக்க தேர்விழா
ஆரும் புகழ அருள்மணக்கச் செய்வதற்குப்
பத்தர் பலர்முயன்ருர்; பாங்குடனே ஓங்கும் இந்த
உத்தமாம் தேர்விழா ஊரார் பயனடையத்
தீவிலுள்ள பேரெல்லாம் சேர்ந்து நலம்பெறவே
யாவருமே உள்ளம் இனிது நிறைவுறவே
அன்னை யருளால் அழகாய் நடைபெறுக;
மன்னுகின்ற பத்தர் மனக்குறையெல் லாம்ஒழிக;
எங்கும் இறையுணர்வே ஏற்றம்பெறுக; இன்பம்
பொங்குகவே; சூழ்க புகழ்.

-கி. வா. ஜகந்நாதன்

பக்திமார்க்கம் தலையெடுக்கவும், பண்பும் அன்பும்
நாட்டிற் பெருகவும், மங்கல வாழ்வு
வீட்டிற் சிறக்கவும், மன அமைதி
எம்முள் நிலைக்கவும்

அன்னை துர்க்காதேவி திருவடிகளை
தேர் வெள்ளோட்ட நந்நாளில்

வணங்கி நிற்கிறேம்.

எஸ். சின்னத்துரை அன் பிரதர்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இந்திர பவான் குளிர்பான நிலையம்
சுன்னுகம்.

ஏ. கே. எஸ். ஆபரண மாளிகை
68, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

எலக்ரிக் லைன்ஸ்
120, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உபகரண உற்பத்தி நிலையம்
வெள்ளியம்பதி
அளவெட்டி,

மில்க் வைற் ஸ்தாபனம்
K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

இ. சின்னத்துரை
பிரபல வர்த்தகர்
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

இலட்சுமி நாதன்ஸ்
பிரபல வர்த்தக நிலையம்
தெல்லிப்பழை.

ஈஸ்வரி ஸ்ரோர்ஸ்
K. K. S. ரோட், சுன்னுகம்.

அண்ணு கோப்பி ஸ்தாபனம்
நியூ மார்க்கட்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சத்தியா ரவல்லேஸ்
224 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# அடிகளாரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயச்சித்திரத்தேர் சிறப்பு வெள்ளோட்ட விழாவையொட்டி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருளிய வாழ்த்துரை:

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை கவர்ச்சிமிக்க ஒரு சிற்றூர். இனிய சோலை சூழ்ந்த வளைவில் அன்னை பராசக்தி, கொற்றவைத் திருக்கோலத்தில் .துர்க்கை அம்மனாக எழுந்தருளி இன்னருள் பாலித்து வருவதைப் பாரறியும். இத் திருக்கோயில் சித்திரத்தேர் ஒன்றைப் பெறுகிறது. ஆம்! சிற்பக் கலையும், ஓவியக்கலையும், கவின் கலையும் தமிழக சமய வாழ்வோடு இரண்டறக் கலந்தவை. இத் திருக்கோயிலின் ஆட்சிக்குழு பாராட்டுதலுக்குரிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இயங்குகிறது. சகோதரி அவர்கள் தலை சிறந்த கலைதெரி சிற்பிகளைக்கொண்டு சித்திரத்தேர் உருவாக்கியிருக்கிறார். ஆவணித் திங்களில் தெல்லிப்பழை திருவீதி தேரோடும் வீதியாகக் காட்சியளிக்கும். மூலமத்திரத்தை ஒலித்திடும் மணி ஓசை குலுங்க அன்னை கொற்றவையை ஏற்றுத் தெல்லிப்பழைத் தேரோடும் வீதியில் சித்திரத்தேர் சீராக உலா வருவதைக் காணும் கண்கள் பயனுடைய கண்கள். வாழ்த்தும் வாயே வாய்! வணங்கும் தலையே தலை! தேரையிழுக்கும் கரங்களே கரங்கள்! இச் சித்திரத்தேர்க் காட்சியை நினைத்து வணங்குகின்றோம். வாழ்த்துகின்றோம்.

இன்ப அன்பு

**தவத்திரு**
**குன்றக்குடி அடிகளார்,**
குன்றக்குடி,
இராமநாதபுரம் ஜில்லா,
தமிழ்நாடு.

# ஆலயத்தின் புராதன....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தியிலே அக்கோயில் அமைந்துவிட்ட வாய்ப்பு எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாகும். அன்றியும் புராதனப்பெருமை வாய்ந்த மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலென்ற பெருந்தலத்தோடு இத்தலம் பண்டு தொட்டே மானம்புத் தொடர்புகொண்டிருக்கும் தன்மையும், அத்தலம் வெண்கல் திருப்பணி முடிந்து 1815 ம் ஆண்டிலே கும்பாபிஷேகமாக, இத்தலமும் அவ்வாறே இருப்பணி முடிந்து அடுத்த ஐந்தாவது ஆண்டிலே 1820 ல் கும்பாபிஷேகமாய செய்தியும் குறிப்பிடத்தக்கன. குறித்த மானம்புத் தொடர்பு 1829 ம் ஆண்டிலே ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டுவருகின்றது. இக்கோயிலின் பழைமையை ஓரளவில் உணர்ந்துகொள்வதற்கு இது வாய்ப்பாகின்றது.

அக்காலப் பொருளாதார நிலையில் ஒரு கோயில் உற்பத்தியாகி அது முறையாகக் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகமுமாகும் நிலை அடைவதற்கிடையிற் குறைந்தது நூறு வருஷமாவது கழிந்திருக்க வேண்டும் என்று கருதுவது பிழையாகாது. ஆகவே இக்கோயிலின் ஆரம்பம் எப்படியும் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது அறிஞர் அபிப்பிராயமாகும்.

**ஆலயத்தின் வரலாறு:—**

பொதுவாக இலங்கையிலுள்ள சைவக் கோயில்களெல்லாம் முற்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தடையின்றி நடைபெற்ற பிரயாணத் தொடர்பின்மூலமாகவே விருத்தியடைந்துள்ளன என்பது பிரசித்தம். கடல் யாத்திரை மூலமாகக் காலா காலங்களில் தங்குதடையின்றி இங்குள்ளார் தலயாத்திரைக்காக அங்கு செல்வதும், சிறந்த தெய்வ மூர்த்தங்களை அங்குபெற்று இங்கு கொண்டு வருவதும், சிறந்த ஆசாரியர்களை அங்கிருந்து அழைத்து வருவதும், ஆன்ம விசாரமுற்ற சிலர் இங்கிருந்து அங்கு சென்று தங்கிவிடுவதும், அத்தகைய ஞானிகள் சிலர் அங்கிருந்து இங்கு வந்து தங்குவதும் அக்காலத்திற் சர்வசாதாரணமான நிகழ்ச்சிகளாயிருந்து வந்துள்ளன இவ்வகையில் ஏற்பட்ட இரண்டொரு நிகழ்ச்சிகளே இத்திருக்கோயிலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாயிருந்திருக்கின்றன.

## தலயாத்திரை சென்ற இலங்கையர்

ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் தெல்லிப்பழையிற்கதிர்காமர் என்ற சைவ வேளாளர் ஒருவர் வசித்து வந்தார் அவர் தலயாத்திரை புரிவதிற் பக்தியும் சிரத்தையும் மிக்கவர். ஏறக்குறைய 1750ம் ஆண்டளவில் அவர் தல யாத்திரைக்காகப் புறப்பட்டுக் காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழ்க்கரையிலுள்ள வேதாரணியத்திலே கரையேறினர். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தல வழிபாடு செய்துகொண்டு காசிவரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறையப் பத்து வருடங்கள் கழிந்தன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழும், சமஸ்கிருதமும் நன்கு கற்றுத்தேறி ஒரு துர்க்கா தேவி யுபாசகராகவும் மாறிவிட்டார். அதனல் ஏறக்குறைய 1760ம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரமொன்றும், வெண்கலத்திலைமைந்த 'திருமுகக் கெண்டி' உருவம் ஒன்றும் கையோடு கொண்டுவந்தார். குறித்த அன்பர் கதிர்காமர் என்பவர் காசியிற் பலநாள் தங்கியிருந்திருப்பார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்திநான்கினுள்ளும் காசியிலுள்ள சொப்பனேஸ்வரிபீடம் முக்கியமானது. துர்க்காதேவி ... களுடனும் பொலிந்திருக்கும் பீடம்அது. அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருப்பார் என எண்ணுவதற்கு இடமுண்டு. இங்ஙனம் அவர் தாம்கொண்டு வந்த இயந்திரத்தையும், திருமுகக் கெண்டியையும் உழுகுடைப்பதியில் ஒரு மரத்தடியிற் கொட்டிலமைத்து அதில் தாபனஞ்செய்துபூசித்து வந்தார்.

உழுகுடைப்பதித் துர்க்கா தேவியாலயத்தின் ஆரம்பத்தையொட்டி வழங்கிவருங் கர்ணபரம்பரைச் செய்திகளில் முக்கியமான செய்தி இதுவாகும். குறித்த நிகழ்ச்சியிற் சம்பந்தப்பட்டவர் கதிர்காமரன்று, சுப்பர் என்னும் வேளாளர் என்பாரும் உண்டு.

## அங்கிருந்து வந்த அந்தணர்

இவ்வகையில் கதிர்காமர் அவர்களோ சுப்பர் அவர்களோ ஆன்மார்த்தமாகப் பூசித்து வந்த இத்தலம் அவர் காலத்தின் பின் தன் வளர்ச்சியில் ஒரு திருப்பமுற்ற செய்தியை இனிக் காண்போம்.

அக்காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்த அந்தணப்பெரியாரொருவர், யாத்திரை நோக்கமாகவோ தேவியின் பிரத்தியேகமான அழைப்பின் பேரிலேயோ அறியோம், தோணி மூலம் காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்தார், அவர் அங்கிருந்து தெல்லிப்பழையை யடைந்து, களைத்துத் தவித்துப் பசிவேதனையும் வருத்தக் குறித்த உழுகுடைப்பதியில் ஒரு மரத்தடியில் வந்திருந்து அயர்ந்து உறங்குவாராயினர். அக்காலத்திற் செல்வமுஞ் செல்வாக்குமுள்ளவர்களாயிருந்த அப்பகுதிப் பெரியார்களில் நாகநாத உடையாரும் ஒருவர். குறித்த தினத்தன்று இரவிலே தேவி-சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்து வந்த அத்தேவி - உடையாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, தன்னையும், அவ்விடத்தில் வந்து அநாதரவாயிருக்கும் காஞ்சிப்பதி அந்தணரையும் ஆதரிக்குமாறு உணர்த்தியருளினர். அவ்வருள்வழி நின்று உடையார், ஆலயத்தையும் அந்தணரையும் ஆதரிக்கமுற்பட்டார். தேவியின் கருணைக்குப் பாத்திரமாயிருந்தவரும் தேவியால் தமக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டவருமாகிய அவ்வந்தணரையே ஆலய அர்ச்சகராக நியமித்து வைத்தார், அந்த அந்தணருடைய சந்ததியினரே இன்றும் இக்கோயிலின் அர்ச்சகர்களாக இருந்து வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாயிருந்த அந்த ஆலயம் பரார்த்த பூசைக்குமுரிய நிலையமாய் விருத்தியடைந்தவற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகின்றது.

அதன்மேல், ஆலய பொறுப்பாளராயிருந்த உடையாரிடத்திலும், அர்ச்சகராயிருந்த அந்தணரிடத்திலும் நிலைத்து நின்றுவிளங்கிய தேவியின் அருட் பிரவாகம் அப்பகுதியிலுள்ளார் அனைவரையும் வசிகரித்து வருவதாயிற்று. அதன் காரணமாக நாளடைவில் பொன்னும்பொருளும் பெருகி ஆலயத் திருப்பணியுஞ் செவ்வனே நடைபெற்று வந்துகொண்டிருப்பதாயிற்று, அவ்வகையிலேயே முன்குறிப்பிட்டவாறு 1820ம் ஆண்டிற் கும்பாபிஷேகம் நடைபெறுதற்குரிய நிலை உருவாயிற்று எனக் கொள்ளுதல் பொருந்தும்.

## திருப்பணி வேலைகள்

இதனைத் தொடர்ந்து நூறு வருடத்திற்கு மேல் சிதைவுற்றிருந்த ஆலயத்தைத் திருப்பணிசெய்து சிறப்பிக்கவேண்டும் என்ற எண்ணம் 1953ம் ஆண்டு அம்பாள் பக்தர்களிடம் உதயமானது. திருப்பணிச் சபையொன்று ஆரம்பிக்கப்பட்டு; இம்முயற்சிக்கு ஆதரவு திரட்டப்பட்டது. 1962ம் ஆண்டு புதிய நிர்வாக சபையொன்று தெரிவு செய்யப்பட்டு அவர்களின் விடாமுயற்சியால் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று 1965ம் ஆண்டு ஆவணித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதன் பின்பு ஆலயத்தின் வளர்ச்சி நாளுக்கு நாள் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1968ம் ஆண்டு கொடிமரம் நாட்டி மஹோற்சவம் முதன்முதலாக ஆவணி மாதத் திருவோணத்தில் நிறைவுபெறக்கூடியதாக நடைபெற்றுத் தொடர்ந்து மஹோற்சவம் வருடா வருடம் நடைபெற்றுவருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திருப்பணிகளோ வியத்தற்குரியவை இவற்றின் சிகரமாக வைத்து எண்ணப்படத்தக்கது தேர்த் திருப்பணியாகும். இத்திருப்பணி கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று ஆவணித் திங்கள் பத்தொன்பதாம் நாள் (4-9-78) சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெற இருக்கிறது. இவ்விழாவில் கலந்துகொள்ள அடியார்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர், இவ்வாலயத்தில் செவ்வாய்க் கிழமைகள் தோறும் உற்சவம் நடைபெறுகிறது. பெருந்திரளான பக்தர்கள் செவ்வாய்க் கிழமை தோறும் வருகை தந்து, நேர்த்திகள் செய்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். அடுத்த ஆண்டில் சிறந்த இராஜகோபுரமும் அமைந்து, அம்பாள் ஆலயம் மேலும் புதுப்பொலிவு பெறும் என்று எதிர்பார்க்கின்றோம்.

# குரல் மாற்றிப்பாடுவதில் வல்லவர் இந்த ரமேஷ்!



யாழ்ப்பாணத்தில் எங்காவது ஒரு இசை அரங்கு-அதாவது 'பொப்' இசையரங்கு நடைபெறுகிறதென்றால் அங்கு ரமேஷ் வைகுந்தநாதனின் குரல் ஒலிக்காமல் விடுவது அபூர்வம்.

அந்த அளவுக்கு பொப் இசை மேடைகளில் இவருக்கு வரவேற்பு நிலவுகின்றது.

'பொப்' பாடல்களை மாத்திரமல்ல, பக்தி, மெல்லிசைப் பாடல்களையும் திறமாகப் பாடும் இவர் இந்தி, இஸ்லாமிய மார்க்கப் பாடல்களையும் சிங்களப் பாடல்களையும் இலகுவாகப் பாடுகிறார். வேற்றுமொழி அறிவில்லாவிடினும் வேற்றுமொழிப் பாடல்களை உச்சரிப்பு பிழையின்றி அம்மொழி மக்களே கேட்டுவியக்கும்வரையில் பாடக்கூடியவர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவருக்கு கர்நாடக இசையிலும் பரிச்சயம் உண்டு.

பிரபல பாடகர்களின் பாடல்களைப் பாடும்போது அவர்களின் குரலைப் போலவே தம் குரலை மாற்றிக்கொண்டு பாடுவதில் கைதேர்ந்தவர். அண்மையில் இஸ்லாமிய கீத நிகழ்ச்சியொன்றில் தென்னிந்திய இஸ்லாமிய பாடகர் இசை முரசு நாகூர் எம். ஹனிபாவின் பாடல்களை அவரைப் போலவே குரல் எடுத்துப்பாடி பாராட்டைப் பெற்றதுடன் 'ஈழத்து இசை முரசு' என்ற பட்டத்தையும் பெற்றார்.

1975-ம் ஆண்டு தென் இந்தியா சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட ரமேஷ் சென்னையில் மேஜர் சுந்தரராஜன் தலைமையில் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பாராட்டைப்பெற்றார், இந்திய வானொலியிலும் பாடினார்.

வானொலி பாடல்களில் இவருக்கு புகழ் தந்த பாடல் 'அலைகடல் மேலே அவனின் வாழ்வு யாருக்குத் தெரிகிறது' என்பதாகும்.

'மக்கள் பாடகர்' என்று தம்மை அழைத்துக் கொள்வதில்பெருமையடையும் ரமேஷ் வைகுந்தநாதன் விரைவில் தமிழகம் சென்று இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள திட்டமிட்டுள்ளார்.மலேசியா சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் செல்லும் திட்டமுமுண்டு.

தனக்கென ஒரு தனிவழியைப் பின்பற்றி பாடிவரும் ரமேஷ்வைகுந்தநாதன் பழகுதற்கு இனிமையானவர்—ரசிகர்களுக்கு மதிப்பு அளிப்பவர்.

இசைத்துறையில் மேலும் பல துறைகளைத் தெரிந்து கொண்டு முன்னேற வேண்டும், இசைப் பிரியர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பது இவரது இலட்சியம்,

# மீன்களுக்கு மின்சாரவசதி

ஆபிரிக்கப் பூனைமீன் 400 வாட்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. தென்அமெரிக்காவின் மின்சார ஈல் என்ற மீன் 600 வாட்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. நாம் நம்வீட்டில் சாதாரணமாக 127 அல்லது 220 வாட்ட் மின்சாரமே உபயோகிக்கிறோம். இத்தகைய ஒரு மீன் நம் வீட்டில் வளர்ந்தால் மின்சாரத்தைப் பற்றிய பிரச்னையே இராது. மீனைக்கொண்டுவரலாம். ஆனால் அது வாழும் கடலையும் கொண்டுவரவேண்டுமே... இன்னும்ஒருவகை மீன், தான் துரத்தும் இரையைக் கண்டுபிடிக்கத் தன்னில் உள்ள ரடார் போன்ற ஒரு கருவி அமைப்பைப் பயன்படுத்துமாம்.

'அது அந்த ரடார் கருவியால் ஓர் ஆம்பியரில் 10 கோடியில் ஒரு பங்கு மின்சார ஓட்டத்தைக்கூட அறிந்து கொள்ளுமாம். மனிதன் அமைத்த ரடார்கருவியைக் காட்டிலுங் கூட நுட்பம் வாய்ந்தது அந்த மீனின் இயற்கை ரடார உறுப்பு.

தென்அமெரிக்காவில் மேற்கு கொலம்பியாவில் சாக்கோ என்ற இடத்திலுள்ள ஒரு தவளை அம்பு போன்று பீச்சி அடிக்கும் விஷத்தில் ஒருதுளியில் லட்சத்தில் ஒரு பங்கு ஒரு மனிதனைக் கொல்லும் அளவிற்கு கொடியதாம்.

கடல் ஆமைகள் 100 ஆண்டுகளுக்கு மேலாக வாழும் நீடிய ஆயுள் உடையவை. திமிங்கிலங்கள் 100 அடி நீளமும் 140 டன் எடையும் கொண்டவை திமிங்கலத்தின் குட்டி பிறந்ததும் தாயின் நீளத்தின் பாதி நீளத்தை உடையவையாயிருக்கும். கருப்பையில் ஒரு அவுன்சில் லட்சத்தில் ஒரு பங்காக இருந்த குட்டி 22½ மாதத்தில் 29 டன் நிறையாக வளர்கிறது. அதாவது 3000 கோடி மடங்காக வளர்கிறது. சிக்கேடா என்ற பூச்சி 17 ஆண்டுகளாக மண்ணுக்குள் புதைந்தே வாழும். 17 ஆண்டுகள் கழித்து அவை பூமியின் மேற்பரப்புக்கு வந்து அங்கு களிமண் வீடு அமைத்து வாழும். (வெ. நி.)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199, தந்தி: வைரம்.

# திராவிட கலாசாரம்பற்றி ஆராய்கிருர் ஜப்பானிய பேராசிரியர்

சோழர் காலத்திய சாசனங்கள் கல்வெட்டுக்களில் காணப்படும் பெயர்கள்-சொற்களின் விளக்கப் பட்டியல் ஒன்றை ஜப்பானைச் சேர்ந்த பேராசிரியர் என். கராஷிமா தொகுத்துவருகிருர்.

மதுரை பல்கலைக்கழகத்தில் தொன்மைக்கால வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் டாக்டர் வை. சுப்பராயலுவின் ஒத்துழைப்புடன் கராஷிமா இந்தப் பட்டியலைத் தயாரிக்கிருர். 9590 பெயர்கள் சொற்களின் தொகுதி விளக்கத்தை கராஷிமா இதுவரை தயாரித்திருக்கிருர். தமது பணிக்காக அவர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுதியிருக்கிருர்.

பேராசிரியர் கராஷிமா தென்னிந்தியாவையும் சோழர் கால வரலாற்றையும் ஆய்வதில் பிரதானமாக அக்கறை கொண்டவர். திராவிட கலாசாரம் அவரது கவனத்தை ஈர்த்திருக்கிறது. திராவிட கலாசாரம்பற்றி ஜப்பானியர்களுக்குத் தெரியாது. ஜப்பானிய கலாசாரமும் மரபும் ஆரிய கலாசாரத்தின் அடிப்படையில் அமைந்தவை. எனவே திராவிட கலாசாரம் பற்றி ஜப்பானியர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்று அவர் கருதுகிருர். ஏற்கனவே ஆறு ஆண்டுகள் இந்தியாவில் இருந்த அவர் இப்போது மீண்டும் இரண்டு மாதங்கள் இந்தியாவில் இருப்பதற்காக வந்துள்ளார்.

தென்னிந்திய ஆய்வுகளுக்காக குறிப்பாக தமிழர் கலாசாரங்களைப்பற்றிய ஆய்வுகளுக்காக அவர் ஒரு கழகத்தை அமைத்துள்ளார். அக்கழகத்திற்கு அவர் தலைவராக இருக்கிருர். தென்னிந்தியாவைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று ஜப்பானியர்கள் அக்கறை காட்டுவதைத் தொடர்ந்து அக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

'இந்தியாவின் முகங்கள்' என்ற நூலை ஜப்பானிய மொழியில் பேராசிரியர் கராஷிமா எழுதியுள்ளார். இந்திய வரலாற்றில் கிராம சமுதாயம்பற்றிய ஒரு ஆய்வு- இந்தியாவுக்கு ஒரு அறிமுகம் ஆகிய நூல்களை அவர் தயாரித்துள்ளார்.

திருமதி கராஷிமாவும் தமிழ் நன்கு அறிந்தவர். 'எமது இந்தியா' என்ற நூலை அவர் வெளியிட்டுள்ளார். இந்திய சமூகத்தில் பெண்கள் பங்கு என்பதுபற்றி அந்த அம்மையார் தற்போது ஆய்வு நடத்துகிருர்.

(ரவி)

## பாவம் இந்தப் பெண் பூச்சி!

வட்டப்பூச்சிஎன்ற ஒரு வகைப் பூச்சியின் உடலுறவு விநோதமானது. ஆண்பூச்சி தன் விந்துவைப் பெண் பூச்சியின் வாயினுள் சிந்தி, உடனடியாகப் பெண் பூச்சியைத் துண்டு துண்டாகப் பிய்த்தெறிகிறது. அவ்வாறு பிய்த்தெறியப்பட்ட ஒவ்வொரு துண்டிலுமிருந்து முட்டை உருவாகிறது. அந்தோ பரிதாபம். அந்தப்பெண் பூச்சியின் முதல் இரவே அதன் வாழ்வு முடிந்த இரவாக மாறுகிறது.

(வெள். நிரு)

## பெருநாள் யார்க்கோ!

வீதியில் தீபம், விளக்கில்லை வீட்டிற்கு!
தெருவிலே வெளிச்சம், இல்லத்துள் இருட்டு!
பகலாகும் இரவு! பணக்காரச் சிறுவர்க்கு...
விடிந்தால் பெருநாள். விடிவதற்கு இருள் எங்கே?
முப்பது நாளும் முழுதாய் நோன்பிருந்த
பத்தினி நீ! பசி உனக்கு மறந்ததுவோ
பீற்றல் புடவையினுள் பீறி எழும் அழுகை
மூடி மறைப்பதற்குள் முழு நிலவும் நாணிவிடும்.
உண்ணுதற்கு ஒருகவளம்! உடல்மறைக்க சிற்றுடை!
எண்ணி நீ இதற்காய்...ஏங்குகின்ருய்? சற்று பொறு!
கண்ணீர், கண்கோடியிலே! கரத்தால் எகிறிவிடு!
நிச்சயமாய், பெருநாள்! நினக்கே...எவர்க்குமல்ல!
ஏனெனில்
முப்பது நாளும் முழுதாய் நோன்பிருந்த
பத்தினி நீ! பசி மறந்தாய்...பாதை...அதோ...

-கலைவாதி கலீல்

## பாம்பைத் தின்னும் எலி

பூச்சி புழுக்களைப் பிடித்துத்தின்னும் ஒரு வகை சுண்டெலி துந்திராப்பிரதேசங்களிலும் வனந்தரங்களிலும் வாழக்கூடியவை, அவை பாலூட்டிகள். அவை குண்டோதர தீப்பசி உடையவை. ஒரு மணி நேரத்திற்கு ஒருதடவை வயிற்றை நிரப்பும். அவை பூச்சி புழுக்கள் பிறவகை எலிகள் பாம்புகள் பறவைகள் ஆகியவற்றை உணவாகக்கொள்ளும்.

இவ்வுணவுகளை வேட்டையாடிக் கொன்று தின்பதில் புலிபோன்று பயங்கரமானவை. பரிசோதனைக்காக ஒரு கூட்டில் ஒரு பெரிய பாம்புடன் அடைக்கப்பட்ட இவ்வகைச் சுண்டெலி சிறிது நேரத்தில் அந்தப்பாம்பையே கொன்று தின்றுவிட்டதாம்.

(வெள். நிரு.)

## ஜயந்தி

அ. செ. மு.

இவை போன்ற இன்னோரன்ன பல நிகழ்ச்சிகளை என் செவி மூக்கு புலன்களின் நுண்ணுர்வு கிரகித்துக்கொண்டிருக்க, ரயில் பெட்டிக்குள்ளே மீண்டும் அமைதி குடிகொள்கிறது. அந்த அமைதியை என்னை அண்மித்ததொரு குறுகிய அலைவட்டத்துக்குள்ளாக மதுகர ரீங்காரமென என் காதுக்குள் மெல்லக்கிணுகிணுத்த கன்னியர் தம் பேச்சுக்குரலும் அதனோடிணைந்து கைவளை ஒன்றோடொன்று மருவி அரற்றும் மெல்லிசையாகக் கிளுகிளுத்த அவர் தம் மென்னகையும் தாழம்பூவின் சுகந்தமும் மேலும் இனிதாக்கின. இவர் எங்கிருந்தோ வந்து எனது ஆசனத்தைச் சூழ்ந்து என் மேனியை மருவி காற்றிலே மிதந்து நிற்பாராய் மன உணர்விலே தோற்ற, உறக்கத்தில் அசையும் பாவனையாய் மெல்ல அசைந்து முகந்திரித்து பையவே பாதிவிழி நோக்கெறிந்து கிடப்பன். அந்தக் கள்ள விழிப்பார்வையில் என்னையே நோக்கிக் குறுநகை அரும்ப நிற்கும் மற்று மிரு கயல் விழிகள் சிக்கிக்கொண்டபோது, இருமுனைக் கூர்மையால் தாககுண்டதொரு அதிர்ச்சியுற்றேனாய் விருட்டென எழுந்திருந்து அங்கு என் ஆசனத்தைச்சூழ வளைத்து நின்ருர். முழுப்பேரும் இருக்கைகொள்ள இடம் உபகரித்து மனமுவந்தனன். அத்தனை பேரும் வெள்ளை உடையில் வெள்ளைக் கமலப்போதுகளாய் ஒளிர்ந்த பள்ளிச்சிருர். கொழும்பு மாநகரப் பாடசாலைகளில் கல்வி கற்கத் தினமும் இதே நேரம் விடியற்சாமமாக எழுந்து ரயில் ஏறிப்போய் வரும் சிட்டுகள்.

மெய்யாக உறங்குகிறேனோ அல்லது உறங்குவதாகப் பாவனை பண்ணுகிறேனோ என்பதை நோட்டமிட்டு அதனை உற்றறிவாளாய் என் முகம் நோக்கி நின்றவள் முதலில் இருக்கை ஏற்க, மற்றோர் அவளருகே அக்கம் பக்கமாய் அமர்ந்தார்கள். யன்னல் சட்டத்தில் தலையணையைச் சாய்த்து தலையணைமிது கைவைத்துக் கைமீது தலை பதித்து ஒருக்களித்து ஒடுங்கியபோது குறுநகை மீத்த அக்கயல் விழிக்கள்ளியின் எழில் மிகு தோற்றம் சில கணம் கண்ணுக்குள்ளே நின்ருடிற்று. இன்னொருக்கால் அதனைத் தரிசிக்கும் ஆவல் துடித்தெழுந்தது. யன்னலூடாக வீசிய குளிர்ந்த காற்று என் மேனி வருடி என்னை மீண்டும் உறக்கத்தில் ஆழ்த்தி விட்டிருக்கவேண்டும். மென்மையானதொரு மெய்தீண்டுதலில் கண்விழித்தேன். அதே கன்னிமலரின் கரங்கள்தாம் வீணையின் தந்திகளைத் தொட்டாற்போல் என்னைத் தொட்டு எழுப்பின. என்னகத்தே புதுமை எழுச்சி தரும் உணர்வுகளையும் மீட்டின. என்னெதிரே என் காலடியிலே காலைத்தேநீர் காத்திருப்பதைச் சுட்டிக்காட்டி முகம் மலர்ந்தாள் அப்புஷ்பலதா. ரயில்வே சிற்றுண் சேவைப் பணியாள் கிண்ணங்களில் தேநீரை நிரப்பி எங்கும் அதன் இனிய நறுமணம் பரப்பி ஒரு தட்டில் ஏந்தி என் முன் நின்ருர்.

திவ்யமான தேநீர்! அதில் ஒரு மிடறு—ஒரு சில மிடறு தான், பருகிய அந்த ஒரு கணத்தே உறக்க அசதியும் உடல் அலுப்பும் உள்ளச் சோர்வும் எல்லாமே அத்தேநீர் கிண்ணத்துக்குள்ளே ஒரு புயலடித்து புதுமைப் புரட்சி பண்ணிஞற்போல், பறந்தோடிப்போகின்றன.

பொழுது நன்ருக விடிந்து விட்டது, ஜயந்தி ஜயந்தி என்று அழைத்து மாணவியர் தமக்குள்ளாகப் பேசிக்கொண்டார்கள். அவளுடைய பெயர் ஜயந்தியாக இருக்கவேண்டும். பகலொளியில் அவள் அழகுமிகுதோற்றம் இன்னும் எடுப்பாகக் கவர்ச்சியுடனே ஒளிர்ந்து பசுமை கொழித்த அக்கணமுல்லை நிலப்பரப்பாகக் கண்களைக் குளிர்வித்தது. அந்த ரயில் தரிப்பிடத்தின் பெயர் வனமுல்லை என இருந்திருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்.

கிழக்கு வானில் விடிவெள்ளி எழுந்தவேளை மணிப்புறவும் மாடப்புறவுமாய் இருளில் தோற்றி மின்காந்த ஒளியில் பளிச்சிட்ட கன்னியர் குழாம் இதுசமயம் போதிமர்தவன் சன்னிதியில் காணிக்கை வைத்த அலரி மலர்களாய் சுபசோபிதமாய் என்னைச் சூழ அமர்ந்திருப்பர். அந்த மனோரம்மியத்தில் என்னையே மறந்து லயித்திருக்க வண்டி மருதானை தரிப்பு வலயத்தினுள் நுழைந்து மெல்லப் போய் நின்றது.

நான் ரயில் விட்டிறங்க வேண்டிய ஸ்தானம் மருதானைதான். என்ருலும் நான் இன்னமும் எழுந்து உடைமாற்றிக்கொள்ளாமலோ மற்றும் அது போன்ற பட்டணத்து வேடம் பூணும் ஆயத்தங்கள் எதுவும் செய்துகொள்ளாமலோ இருந்த இடம் விட்டு அசையாமலே இருந்தேன். கால்களை நீட்ட மடக்க முடியாமல் சில மணி நேரம் ஒரே இருப்பாக இருந்ததனுல் கால்கள் மரக்கட்டையாக மரத்துப்போயிருந்தன. கடைசித் தரிப்பிடத்துக்கு முந்திய ரயில்தானம். கொழும்புப் பிரயாணிகள் பெரும் பகுதியாய் இங்கேயே இறங்கிவிடுவார்கள். அதனுல் ரயில் பெட்டிக்குள்ளே சிறிது வேளை பெரும் ஆரவாரம்! என்னைச் சுற்றிலும் அந்த ஆரவாரம் மெல்ல ஓயட்டும், ரயில் அதற்குள்ளாக ஓடிவிடப் போகிறதா. என்று பொறுமையுடனே உட்கார்ந்திருந்தேன். எனக்கு ரயில்வேயில்தான் வேலை நியமனம் ஆகியிருந்தது. அதுவும்கூட மருதானை ரயில் நிலையத்தில்தான். என்னைச் சூழ அமர்ந்திருந்த பள்ளிச்சிருர் என்னைப்போலவே ரயில் நின்ற மாத்திரத்தே முண்டியடித்துக்கொண்டு இறங்குவதற்கு அவசரப்படாமல் மற்றைய பிரயாணிகள் தங்கள் பெட்டி படுக்கை சாமான்களையும் மூட்டை முடிச்சுகளையும் நகர்த்தி அப்புறப்படுத்தி தங்களோடு கூட மேடையில் இறக்கி வைக்கும் வரை எழுந்து பொறுமையுடனே அமைதியாக நின்ருர்கள். அந்த ஆரவாரம் எதையும் நானும் பொருட்படுத்தாமல் யன்னலூடே வெளியே பார்வையை ஓடவிட்டு சிலையாக இருந்ததை அவதானித்த மாணவியரில் ஒருத்தி என் முகத்தெதிரே கை அசைத்து 'இது, மருதானை ரயில் தரிப்பு. இறங்கலையா மாத்தயா?' என்ருள். அவள்தான், அவள்தான் நேசவாஞ்சையான தோழமையுடனே மாணவியர் ஜயந்தி ஜயந்தி என்றழைத்த அதே மான் விழி மங்கை! அவள்தான் வீணாகானம் நிகர்த்த குரலிலே இனிதாக இயம்பி மருள விழித்தனள். 'ஓ! மருதானையா நானும் இங்கேதான இறங்க வேணும்!'' அசதி மறதியாக இருந்துவிட்டவனைப் போல் சொல்லிக்கொண்டே எழுந்தேன். மாணவியர் கூட்டம் வாயில்புறமாக மெல்ல முன் நகர்ந்து அசைந்துகொண்டிருந்தது. ஜயந்திதான் எல்லோருக்கும் பின்னுல் நின்ருள். அவர் பின்னுல் ஊர்ந்து நகர்ந்தவள் என் நடவடிக்கைகளை உற்று அவதானித்துவிட்டு 'கொழும்புக்குமுதல் பயணமா மாத்தயா?' என்று மெல்ல வினவினுள். ''ஓம்'' என்ற பாவனையாகத் தலை அசைத்தேன். என் பெட்டி படுக்கை மற்றும் சாமான்களை வெளியே இறக்கும் காரியத்தில் கண்ணுயிருந்தேன். இரண்டொரு வார்த்தைகள் என்னிடம் பேசிவிட அவள் மனத்தே பொங்கி எழுந்த ஆவல் அவள் விழிகளிலும் அந்த மென் முறுவலிலும் துடித்ததை மனதுக்குள்ளாக கணிப்பிட்டுக் கொண்டபொழுது, பார்வையை என்மீதே செலுத்தி நின்றுநின்று, நகர்ந்து போனவளிடம், அவள் முகவதனம் பார்வைக்கு மறையுமுன்னதாக அதனை ஒருக்கால் விழியாரத் தரிசித்து, ''கொழும்புக்கு இதுதான் முதல் பயணம். மருதானை ரயில் நிலையத்தில் வேலை நியமனம் ஆகியிருக்கிறது!'' என்றேன். அதற்குப் பதிலாக மகிழ்ச்சி மலர்ந்ததொரு தலையசைப்பு. அதன் பின் அவள் என் பார்வைக்கு அப்பால் போய் மறைந்தாள்.

என்னை அழைத்துப்போக ரயில் தரிப்பிடம் வந்து காத்து நின்ற யாழ்ப்பாணத்து நண்பரின் முகம் ரயில்பெட்டி யன்னலூடாக வெளியே தோற்றியது. எட்டிப்பார்த்தவர் அவர் பெயர்சொல்லி அழைத்தமாத்திரத்தே ஒரே தாவாகத்தாவி நுழைந்தார்.

என்பொதி பண்டங்களை இருபேருமாய்கூடி மேடைமீது இறக்கிவைத்து ஒரு சுமை ஆளுக்காகக் காத்து நின்ற போது சிறிதுதூரத்தே பள்ளி மாணவியர் கூட்டம் மேல் மேடைவழியாகப் பிரயாணிகள் கூட்டத்தில் சங்கமித்து வெளியேறிக்கொண்டிருந்தது. அவர்களில் ஒருத்தி இன்னமும் மேடையில் தரித்துநின்ற யாழ்ப்பாணம் கோச்சைப் பிரிந்து முன்னேகக் கால் ஏவாத நோக்காக அதனைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள், ஒருவேளை அவள் ஜயந்தியாகவுமிருக்கலாம்.

இந்தவிதமாக, ரயில்வேப்பகுதியார் மாலையிட்டுமனமுவந்து வரவேற்பளித்தது போன்றதொரு நல்லாசியுடனே ரயில்வேயில் கொழும்பு சேர்ந்த சில தினங்களில் வேலை ஏற்றுக்கொண்டேன். மருதானை ரயில் நிலையத்தில், பிரயாணிகளுக்குப் பயணச்சீட்டு வழங்கும் டிக்கட் கவுண்டரில் வேலை ஆகியிருந்தது. ரயில் நிலையத்துக்குச் சமீபமாகவே ஒரு 'போர்டிங்'கில் குடியிருப்பு வைத்துக்கொண்டேன்.

(தொடரும்)

# அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

எதிரே நெட்ட நெடிய உருவம் ஒன்று இடுப்பில் கரம் ஊன்றிச் செருக்குடன் நின்றது. நெருப்புக் கோளங்களைப் போன்ற பெரிய கொள்ளிக் கண்கள், அடர்ந்த பெரிய மீசை, தலையில் இரண்டு கொம்புகள்.

மகேந்திரபூபதியின் உடலில் பூகம்ப நடுக்கம். ஆயினும் ஒருவாறு தேற்றிக்கொண்டு அண்ணாந்து நோக்கினார். உருவம் 'கடகட'வென்று பலமாகச் சிரித்தது.

அப்படியான ஓர் இராட்சத உருவத்தை மகேந்திர பூபதி இதுநாள்வரை கண்டதில்லை. தான் காண்பது கனவா நனவா என்று புரியாமல் அந்த உருவத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்ன மன்னா யோசனை?'' என்று கேலியாகக் கேட்டபடி தனது வலதுகாலைத் தூக்கி நிலத்தில் ஒருமுறை அறைந்தான் கொள்ளிக்காடன். அரண்மனை ஒருமுறை கிடுகிடுத்தது. கூரை ஓடுகள் சில நிலத்தில் விழுந்து சிதறின.

அச்சத்திலிருந்து விடுபட்டு ஆவேசமாக வாளை உருவினார் மன்னர். மறுகணம் மகேந்திரபூபதியினது வாள் பம்பரம்போல் சுழன்றது.

[2]

பலம்மிகுந்த ஆஜானுபாகுவான கொள்ளிக்காடனால் மகேந்திரபூபதியோடு போராடமுடியவில்லை. எனினும் ஆவேசத்தோடு போராடினான்.

அவன் சித்தம் கலங்கியது. உடனே தன் இஷ்டதெய்வமான கொடுங்காளியைப் பிரார்த்தித்துவிட்டு வாளைச் சுழற்றினான் கொள்ளிக்காடன்.

மறுகணம் மகேந்திரபூபதியின் இடது கை வெட்டுண்டு கீழே விழுந்தது. மன்னரின் தோள்மூட்டிலிருந்து இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது. ஒருகணம் வலியால் செயலிழந்த மகேந்திரபூபதி மறுகணம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு போராடினார் எனினும் அவரால் போராட முடியவில்லை.

கொள்ளிக்காடன் மகேந்திர பூபதியினது வலது கையையும் வெட்டிவீழ்த்தினான். மகேந்திரபூபதி வேதனையால் பலமாக அலறியபடி நிலத்தில் சாய்ந்தார். கொள்ளிக்காடன் அவரது மார்பில் வாளைப் பாய்ச்சினான். 'மன்னன் 'விக்கிரமா' என்று பலமாகவீரிட்டு அலறினார். அச்சத்தால் அரண்மனையே கிடுகிடுத்தது.

மன்னனின் பயங்கர அலறலைத்தொடர்ந்து ஊதுகொம்புகள் ஒலித்தன. போர்வீரர்கள் 'குபுகுபு' வென அரண்மனையின் நாலா திசையும் சிதறி ஓடினர்.

கொள்ளிக்காடன் அந்தப்புரத்தை நோக்கி விரைந்து சென்றான். இளவரசி பவளவல்லியின் சயன மண்டபத்துள் நுழைந்த கொள்ளிக்காடன் அவளைத் தூக்கிக்கொண்டு சாளரத்தின் வழியாக கீழே குதித்தான். மறுகணம் தயாராக நின்ற அவன் குதிரை காற்றாய்ப்பறந்தது. பவளவல்லி கூச்சலிட்டாள். கொள்ளிக்காடனது முரட்டுக் கரம் அவளது வாயை இறுக்கியது.

போர்வீரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியவாறு குதிரையில் புறப்பட்டனர்.

இளவரசி பவளவல்லியினது தோழி மேனகா அலறியபடி ஓடிவந்தாள். இளவரசன் விக்கிரமனைக் கண்டதும் ''இளவரசே...பவளவல்லியை ஓர் இராட்சதன் தூக்கிக்கொண்டு ஓடுகிறான்'' என்றாள் தடுமாறியபடி.

''இளவரசே, மன்னரை யாரோ வெட்டிக் கொன்று விட்டார்கள்'' என்று அலறியபடி ஓடிவந்தான் ஒரு போர் வீரன்.

விக்கிரமன் நிலா முற்றத்திற்கு விரைந்தான். அங்கே கண்ட காட்சி அவனைத் திகிலடையச்செய்தது. அவனது அன்புத் தந்தை கைகள் இரண்டும் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக்கொண்டிருந்தார். அவனால் அக்காட்சியைப் பார்க்கமுடியவில்லை. இதயம் புண்ணாக வலித்தது. கண்களால் கண்ணீர் ஆறாகப் பெருகியது.

வீரர்கள் மகேந்திரபூபதியை தூக்கிச்சென்றனர். அரண்மனை வைத்தியர்கள் அவசர அவசரமாக சிகிச்சை அளிக்கத் தொடங்கினர்.

இளவரசன் விக்கிரமன் தனது குதிரையான நித்திய கல்யாணியில் ஏறி அதன் முதுகைத் தட்டிவிட்டான். மறுகணம் அது புயலாகக் கிளம்பியது.

அதைத்தொடர்ந்து ஒருகூட்டம் குதிரைகள் புறப்பட்டன. பொழுது புலர்ந்துகொண்டி

[9-ம் பக்கம் பார்க்க]

## பாசமும் நட்பும் ஏற்படும்

கூட்டுக்கல்வியை நோக்கும் போது அதைச் சிறந்ததென்றே கூறவேண்டும். இலங்கையின் கூட்டு, தனிப்பாடசாலைகளை ஒப்பிட்டு நோக்கும் போது கூட்டுப்பாடசாலையே எல்லாவிதத்திலும் சிறந்ததாக அமைவதைக் காணலாம். கூட்டாகக் கல்வி கற்கும் போது மாணவர்களிடையே ஒருவித பாச உணர்வும் நட்புணர்வும் ஏற்படுகின்றன. பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் உதவிசெய்து பிறர் கஷ்டத்தை உணரவும் பெண்கள் கூச்சமின்றிக் கலந்துரையாடவும் கூட்டுக்கல்வி பெரிதும் நன்மை அளிக்கின்றது. ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும்தன்மை மறைந்து பெண்களை மதிக்கும் தன்மை உண்டாகும். இதனால் இரு சாராருக்கும் போட்டி ஏற்படும். கல்வி சம்பந்தமான பிரச்னைகளைக் கலந்துரையாடித் தீர்க்கலாம்.

இ. கேதீஸ்வரன்
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

### ஆண் - பெண் கூட்டுக்கல்வி

### எண்ணம் பற்றி...

மாணவர் எண்ணம்' மாணவர்களின் அறிவைவளர்ப்பதோடு எழுத்தாற்றலையும் வளர்க்க உதவும் என்பது வெள்ளிடைமலை. விவாத அரங்கு பிரமாதம்.

யோ. பாலேஸ்வரன்
சாவகச்சேரி
இந்துக்கல்லூரி.

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## வெறுப்பு, விரக்தி ஏற்படாது!

ஆண் பெண் கூட்டுக் கல்வியினால் போட்டி மனப்பான்மை மேலோங்கி கல்வியில் பெரிதும் முன்னேற்றம் ஏற்படும். சாதி, இன, மத, பேதமற்று ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழமுடிகின்றது. ஆண் பெண்களுக்கிடையிலுள்ள கூச்சம் அகலுகின்றது.

சகோதர மனப்பான்மை வளர்ச்சியடைவதனால் துன்பங்களிலும் இன்பங்களிலும் எல்லோரும் பங்குபற்றுகிறார்கள். இதனால் எந்நேரமும் மகிழ்ச்சியோடு இருக்கமுடிகின்றது. ஒருவருடன் ஒருவர் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்; எவ்வாறு உரையாடவேண்டும்; எப்படிப் பிரச்னை வராமல் பாதுகாக்கலாம். பிரச்னை ஏற்படின் எவ்வாறு தீர்க்கலாம் என்பவற்றையெல்லாம் நன்கு அறியக் கூடியதாயுள்ளது. வெறுப்பு, விரக்தியில்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு கூட்டுக் கல்வி ஒரு தூண்டுகோலாக உள்ளது.

ஏ. ஸ்கந்தராசா,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## அறிவை வளருங்கள்!

(1) இலங்கையின் முதல் பிரதமர் யார்?
(2) சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டென்பதைக் கண்டுபிடித்தவர் யார்?
(3) தற்போதைய இந்திய ஜனாதிபதியார்?
(4) யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி அரசன் யார்?
(5) அமெரிக்கா தேசத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

விடைகள்:
(1) டி. எஸ். சேனநாயக்கா.
(2) சேர் ஐசாக் நியூற்றன்.
(3) நீலன் சஞ்சீவரெட்டி.
(4) சங்கிலியன்-
(5) கிறிஸ்டோபர்ஸ் கொலம்பஸ்.

-விசாள் சந்திர குமார்,
யாழ். மத்திய கல்லூரி.

## காலை மலர்ந்திற்று

காலை மலர்ந்திற்று பாரீர்
காகங்கள் — பா
மாலை புனைந்திடவே காலை
மலர்ந்திற்று பாரீர்

கிழக்கினின்றுங் கதிரவன்
கிளம்பி ஒளி பரப்பிட,
வழக்கம்போல் தாமரையும்
—இதழ்
விரித்தே வரவேற்றிட
சோலையிலே புள்ளினங்கள்
சுந்தரப் பண்ணிசைத்திட
காலையெனும் அரசி மெல்ல
கனிவுடனே நடந்து
வந்தாள்.

வ. ந. கிரிதரன்,
சட்டுப்பெத்தை வளாகம்.

# உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதிலும்

கேட்டு எழுதுபவர்:
## வி. ரவிச்சந்திரன்

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். யூலை மாத சிரித்திரனில் எனது கடிதமும் விலாசமும் வெளியாகியுள்ளதைப்படித்த வாசகர்கள் அவ்விலாசத்திற்கும் கடிதம் எழுதியுள்ளனர். அதில் ஊர்ப்பெயர் விக்கிரவாண்டி என்பதற்குப் பதில் வீரவன்குடி என்று தவறாக அச்சாகியுள்ளது. எனவே அவ்விலாசத்திற்குஎழுதப்படும் வாசகரின் கடிதங்கள் எங்கெங்கோ அலைந்துவிட்டு மிகவும் தாமதமாக வருகின்றன. எனவே வாசகர்கள் இவ்விஷயத்தில் இனிதவறுசெய்யமாட் மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் கேள்விகேட்டுள்ள வாசகர்கள் தங்களுக்கான பதில்கள் பிரசுரமாகும்வரை சிறிது பொறுமையாக இருக்க வேண்டும். பலர் அவசரப்பட்டு மீண்டும் மீண்டும் கடிதம் எழுதுகிறார்கள். எல்லோருடைய கேள்விகளுக்கும் நிச்சயம் பதில் கிடைக்கும். அப்பதில்கள் உடனே பிரசுரமாவதோ, சிறிது தாமதமாவதோ அப்போதைய இட நெருக்கடியைப் பொறுத்தது. இவ்விஷயத்தில் வாசகர்கள் என்னை நிர்ப்பந்திப்பதில் பலன் இல்லை. இவ்வாரம் இதோடு நிறுத்துகிறேன். மற்றவைகளை பிறகுபார்ப்போம்.

**செல்வி...**
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்) கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

எனக்கு வயது 24. திருமணம் எப்போது நடக்கும்? சொந்தமா? அசலா? குடும்பவாழ்வு சந்தோஷமானதாக இருக்குமா?

அடுத்த ஆண்டு இந்நாள் மணமாகியிருப்பீர்கள். சொந்தம்தான் உமக்கு நல்லது. வாழ்வில் சந்தோஷம் நிச்சயம் உண்டு.

கணவனுடன் உத்தியோகத்திற்காக வெளிநாடு செல்வேனா?

உள்நாட்டிலேயே அமைதியாக வாழ்வீர்கள்.

சாயிபாபாவை பேட்டி காணவிரும்புகிறேன். கைகூடுமா?

கைகூடும்.

என்து மாமியின் இடது அடிவயிற்றுக்குத்து டாக்டர்களால் சுகப்படுத்த இயலாதிருக்கிறது. சுகம் வர என்னசெய்யவேண்டும்?

விரதங்களை கடுமையாக அனுஷ்டிக்கவும்.

**ஜே. அன்ரன்,**
'அமல உத்பவம்,' கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

எனது திருமண விஷயமாக வழக்குத் தொடர்ந்துள்ளேன். முடிவு எப்படி ஆகும்?

செலவுதான் ஆகும். உமக்கு சாதகம் இல்லை.

எனது அப்பா 1948—49-ல் இறந்தார். அவர் இருப்பது எங்கே?

இக்கேள்வி பதில் பகுதிக்கு தொடர்ந்து எழுதும் நீங்களே தவறாகக் கேட்கிறீர்கள். இறந்தவரின் பெயர், இறந்த திகதி, மாதம், வருடம் சொல்லவில்லையே.

எனது வாழ்க்கை எப்படியிருக்கும்?

சிக்கலான வாழ்க்கை. உங்கள் திறமையினால்தான் முன்னேறவேண்டும்.

**திரு...**
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நான் வெளிநாடு செல்வதற்கு நீண்ட காலமாக முயன்றும் பலன் இல்லை.

போகமுடியாது.

எனது காதலி சில காலமாக மனம் மாறியுள்ளாள். அவளுக்கு என்ன நடந்தது?

உமது காதலிக்கு உம்மிடம் ஆழமான அன்பு இல்லை. இக்காதலும் நிலைக்காது.

எனது எதிர்காலம் எப்படி இருக்கும்?

நல்ல நிம்மதியான வாழ்வு அமையும்.

**திருமதி பி. சின்னத்தம்பி**
கரவெட்டி.

எனது தந்தையார் 1976ல் காலமானார். தாயார் காலமாகி சுமார் 6 ஆண்டுகள் ஆகின்றன. இவர்கள் எங்குள்ளனர்?

இறந்தவர்களைப் பற்றிய முழு விபரங்களையும் அளிக்காததால் இக்கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.

என் வாழ்வில் இனி முன்னேற்றம் அதிர்ஷ்டம் ஏதாவது உண்டா?

இன்னும் 5 ஆண்டுகளுக்கு உங்களுக்கு நேரம் சரியில்லை.

**திருமதி ப. பொன்ராஜா**
பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்.

எனது கணவர் தம்பித்துரை பொன்ராஜா வேலை இல்லாது உள்ளார். வெளிநாடு போவதற்கான முயற்சிகள் செய்கின்றார். இது பலன் தருமா?

இரண்டு ஆண்டுகளுக்குள் உள்ளூரிலேயே சுய வருமானம் கிடைக்கும்.

நானும் வேலைக்கு முயற்சிக்கிறேன் எப்போதுகிடைக்கும்?

வீண் முயற்சி. வேலை கிடைத்தாலும் சொற்ப பணமே கிடைக்கும்.

குடும்பக் கஷ்டம் எப்போது நீங்கும்?

இரண்டு ஆண்டுகள் கழித்துநீங்கும்.

**திரு...**
(முழுப்பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்) கரவெட்டி

ஆவியுலகில் ஆவிகளுக்குக் குறிப்பிட்ட கேள்விகளுக்குத்தான் பதில் கொடுக்கவேண்டும் என்ற மேலிடக் கட்டுப்பாடு ஏதாவது உண்டா?

நிச்சயம் கட்டுப்பாடு உண்டு. ஆவியுலக ஆராய்ச்சி செய்த ஜெர்மன் விஞ்ஞானி டாக்டர் கான்ஸ்டன்டின் ராதீவ் அவர்களே இதை ஒப்புக்கொண்டுள்ளார். இதை நான் 12-3-78-ல் வெளியான கட்டுரையிலேயே குறிப்பிட்டுள்ளேன்.

மானுட வாழ்வில் உபயோகிக்கப்படும் சாத்திர முறைகளை நம்பலாமா?

ஏன் நம்பக்கூடாது?

என் வாழ்வில் சுவீப் போன்ற அதிர்ஷ்டம் ஏதும் உண்டா?

இல்லை.

எதிர்காலத்தில் நான் பார்க்கப்போவது அரசாங்க உத்தியோகமா? அல்லது தனித் தொழிலா? அதனால் வளமான வாழ்வு அமையுமா?

தனித்தொழில் மூலம் வளமான வாழ்வு அமையும்.

என் திருமணம்எப்போது? காதல் திருமணமா? பெற்றோர் எண்ணப்படியா?

1979-ம் ஆண்டு பெற்றோர் எண்ணப்படி சொந்தத்தில் நடைபெறும்.

**மு. சுந்தரம்**
கந்தசாமி கோவிலடி,
இணுவில்.

நான் புகழும் சிறப்பும் பெறுவது எப்படி?

முதலில் பணத்தைச் சேருங்கள். மற்றவைகள் தானாக வரும்.

நான் வெளிநாடு செல்ல வாய்ப்புண்டா?

உண்டு. உண்டு. உண்டு.

காலஞ்சென்ற தகப்பனாரது ஆவி எங்குள்ளது?

உமது தகப்பனாரைப் பற்றிய முழு விபரமும் அளித்தால்தான் பதில் கிடைக்கும்.

வெலிஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
தனிப்பிறவி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
ஜெமினி-தேவிகா
வாழ்க்கைப் படகு

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
PAM GRIER
of
'THE ARENA' FAME
in
Friday Foster
(Strictly for Adults)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா
மருதநாட்டு வீரன்

சாந்தி (யாழ்நகர்)
போன்: 7612.
தினசரி. 10-30, 2-30, 6-30, 9-45
ரஞ்சன், எம். கே. ராதா, ரி. ஆர். ராஜகுமாரி, என். எஸ். கிருஷ்ணன், ரி. ஏ. மதுரம், சுந்தரிபாய் நடித்த
ஜெமினியின் பிரமாண்டமான படைப்பு
சந்திரலேகா
உலகப் பிரசித்திபெற்ற கமலா சர்க்கஸ்ஸைகாணுங்கள்
(புத்தம் புதிய பிரதி)

REGAL Jaffna 4th CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பெரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
கடைசி வாரம் நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

யாழ். ஸ்ரீதர் வெண் திரையில்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
சிறந்த கதை
இனிய பாடல்கள்
யாவும் நிறைந்த
ஒப்பற்ற இனியபடம்
புதிய கொப்பி
சாந்தி


# சிறுகதை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பின், அவளுக்கு யார் துணை? எனவே அவளை அந்த நிலைக்கு ஆளாக்கிய என் கணவரிடந்தானே அவள் வரவேண்டும்! என் கணவர்தானே அவளுக்கும் வாழ்வுதரவேண்டும்!

ஒரு நாள் அதிகாலையில் அவள் எங்கள் வீட்டில் வந்து நின்றபோது நான் விபரமறிந்து கொதித்தபோது என் கணவர் "நீயே இப்படி என்முன் நான் என்ன செய்வது மனோ?" என்று கண்கள் கலங்கிட-அந்தக் காட்சி இப்போதும் என் கண்களின்முன் நிழலாடுகின்றது. அதனை இப்போது நினைக்கும் போதுதான் என் கண்கள் கலங்குகின்றன!

அவளுக்குப் பிறந்த குழந்தை இறந்துவிட்டதென அறிந்த அன்றே நான் அவரிடம் போய்ச் சேர்ந்திருக்கவேண்டும். அந்த வாய்ப்பைத் தவற விட்டுவிட்டேன். இப்போது குழந்தை இறந்ததிலிருந்து, ஜெயா தொடர்ந்து நோய் வாய்ப்பட்டிருக்கின்றாள் என ஆரோ கூறியதாக நேற்றுத் தான் அம்மா கூறினாள். அவளுக்கு வைத்தியம் செய்விப்பதற்குக் கணவர் ஒவ்வொரு டாக்டர் வீடாக அலைந்து திரிகின்றாராம்; பணமும் செலவழிகின்றதாம். அவளையும் வைத்துக்கொண்டு அவர் என்ன என்ன கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கின்றாரோ?

ஐயோ பாவம்? இந்த நேரத்தில் உதவ நான அங்கு இல்லையே. எப்படியெனினும் நாளை நான் அவரிடம் போய்ச் சேர்ந்துவிடுவேன்தானே.

கோவிலினுள் வலம் வரும் போது தேவியர் இருவர் சூழ எழுந்தருளி இருக்கும் மகாவிஷ்ணுவின் சந்நிதியில் நான் நின்று கும்பிட்டபோதும், கன்னியர் இருவர் நீங்காக் கருணை மாறிநியாம் சுப்பிரமணியர் சுவாமி சந்நிதியில் நின்று நான் வழிபட்ட போதும் எனக்கு ஏற்பட்ட இந்த உள்ளத்தெளிவு, எனக்கு நிச்சயமாக நல்வாழ்க்கையைத் தேடித்தரும்.

ஆறு மாதமாக நானும் பிள்ளைகளும் பட்டவேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் ஒரு நல்லமுடிவைத் தரும், எனக்கு ஏற்பட்டுள்ள இந்த மனத்தெளிவு!

எனது இந்த முடிவைக் கேள்விப்பட்டவுடனே யார் தான் சந்தோஷப்படாது விடினும் எனது தாயும் என் பிள்ளைகளும் நிச்சயமாகச் சந்தோஷப்படுவார்கள்!

கெதியாக நான் வீடு போய் எனது தாயாரிடம் எனது இந்தத் தீர்மானத்தைச் சொல்லவேண்டும். அவளின் சுருக்கங்கள் விழுந்த அந்த முகத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியை நான் கண்குளிரக் காணவேண்டும்.

விரைவாக நடக்கின்றேன்-என் காவலரைத்தேடி; என் வாழ்வைத்தேடி!!

(யாவும் கற்பனை)

# செல்வம்...

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

சிகைகளையும் இறக்குமதி செய்துகொள்ள முடிகின்றது. குமுதம் போன்றதொருபத்திரிகையினைப் பெற ரூபா ஐந்து செலுத்தவேண்டியுள்ளது.

## பொது அம்சங்கள்

அரசாங்கக் காரியாலயங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் ஏழு மணி நேரம் உழைக்க வேண்டும். இங்கு எமது இ. போ. ச. சேவை போன்ற போக்குவரத்துச் சேவைகள் கிடையாது. தனியாரினல் நடாத்தப்படும் டாக்ஸி சேவைகளையே பயன்படுத்துகின்றனர். தபால் அலுவலகங்களில் ஒவ்வொருவருக்கும் தனிப் பெட்டிகள் வழங்கியுள்ளார்கள். அங்கு சென்று தமக்குரிய பெட்டிகளைத் திறந்து தமக்குரிய தபால்களைப் பெற முடியும். ஒருவர் தனித்தும் கூட்டாகவும் பெட்டியினைப் பெற்றுக்கொள்ள முடியும் ஒவ்வொரு பெட்டிக்கும் தனித் தனி இலக்கம் வழங்கப்படும். தபால்கள் ஒவ்வொருவருக்கும் கொண்டு சென்று விநியோகிப்பது கிடையாது. வெளிநாடுகளுக்கு அனுப்பும் தபால்களை அந்தந்த நாடுகளுக்குரிய பெட்டிகளிலேயே போடுதல் வேண்டும். பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியாபோன்ற பெரிய நாடுகளுக்குத் தனிப் பெட்டிகள் உண்டு. இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குத் தனிப்பெட்டிகள் கிடையாது. இச்சிறிய நாடுகளுக்கு அனுப்ப வேண்டிய தபால்களை அருகிலிருக்கும் பெரிய நாட்டிற்குரிய பெட்டிகளில் போடலாம். இலங்கைக்கு அனுப்ப வேண்டிய தபால்களை இந்தியாவிற்குரிய பெட்டியில் போட்டுக்கொள்ள முடியும்.

# புதிய பாப்பரசர் இன்று பதவி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க திருச்சபையின் 263-வது பாப்பரசராக கடந்த ஆவணி 26-ல் தெரிவாகிய வெனிஸ்நகர கர்தினாலும் பிதாப்பிதாவுமாகிய மேதகு அல்பினோ லூசினியாவுக்கு இன்று வத்திக்கானில் 1-வது அருப்பர்-சின்னப்பர் என்னும் ஆசிப்பீடத்திருப்பெயரோடு பட்டாபிஷேகம் இடம்பெறுகின்றது.

## எளிமைக்கு முக்கியத்துவம்

இம்முறை வழமைக்கு மாறானமுறையில் பட்டாபிஷேகம் மிகவும் எளிமையான முறையில் நிகழவுள்ளது. புதிய பாப்பரசர் தாம் மணிமுடி தரிக்கப்போவதில்லை என அறிவித்துள்ளமை அவர் எளிமைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். திருப்பலிப்பூசையுடன் ஆரம்பமாகும் பட்டாபிஷேக வைபவத்தில் ஆடம்பர வைபவங்கள் எதுவுமின்றி பக்தியும் எளிமையும் நிறைந்து காணப்படுமென வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்றகாலை கர்தினால்கள் திருச்சங்கத்தின் செயலாளர் புதிய பாப்பரசரை சிஸ்ரைன் சிற்றாலயத்திலிருந்து ஆடைகளை அணிவிக்கும்தனியறைக்கு அழைத்துச்செல்வார். அங்கு புதியவர் முன் முழந்தாள்படியிடும் கருதினல் சங்கச்செயலாளர் பாப்பரசர்கள் அணியும் வெண்ணிற வட்டவடிவக் குல்லாயை அவரிடம் கையளிப்பார். பாப்பரசர் கருதினல் என்பதற்கு அடையாளமாக அணியும் சிவப்புநிற வட்டக் குல்லாயைக் கழற்றி விட்டு வெண்ணிறக் குல்லாயைச் சூடிக்கொள்வார். இவ்வைபவத்தோடு பட்டாபிஷேகச் சடங்குகள் ஆரம்பமாகும்.

## பொன் மஞ்சள்-வெண்ணிறக்கொடி

இவ்வைபவத்தையொட்டி பாப்பரசரின் கொடியாகிய பொன்மஞ்சள் வெண்ணிற கொடிகள் வத்திக்கான் எங்கும் பறக்கவிடப்பட்டுள்ளது. நானைய பட்டாபிஷேக விழாவை டெலிவிஷன் நிகழ்ச்சியாக அஞ்சல் செய்வதற்கான ஒழுங்குகள் பூர்த்தியாகியுள்ளது. உலகின் பலபாகங்களிலும் உள்ள பல இலட்சம் மக்கள் நாளைய நிகழ்ச்சிகளை டெலிவிஷனில் கண்டுகளிக்கவுள்ளனர்.

# மாங்குளம் ரயில் சூட்டு வழக்கு

## சாட்சிகள் வராததால் விசாரணை ஒத்திவைப்பு

(உருத்திரபுரம்)

மாங்குளம் ரயில் பெட்டி துப்பாக்கிச்சூட்டு மரணவிசாரணை கடந்த 31-ந் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் திரு. வி. பி. சந்தானலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இச்சூட்டின் போது காயமடைந்த திருமதி க. சுந்தரலிங்கம் குணமடையாது வைத்தியசாலையில் இருப்பதால் நீதிபதி மேற்படி வழக்கை இம்மாதம் 11-ந் திகதி விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் எதிரியான இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் ஜெயசேகராவும் ஆஜராகியிருந்தார்.

# அரபு போதனையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

அரபுப்பாட போதனை கடந்த இரு ஆண்டுகளாக கொழும்பு- இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பினை மீண்டும் ஆரம்பிக்குமாறு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் நிர்வாக சபையின் தலைவர் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜரத்தினவிடம் கோரியுள்ளார்.

# அன்புத்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

குந்தது. விடியுமுன்பே விஜயபுரி அரண்மனையிலும் நகரிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குதிரைகள் புழுதியைக் கிளப்பிய வண்ணம் பறந்து கொண்டிருந்தன. கைகளில் ஈட்டி ஏந்திய வீரர்களின் முகங்களெல்லாம் கோபத்தால் சிவந்திருந்தன.

இளவரசன் விக்கிரமன் விஜயபுரியின் எல்லைக்கே வந்துவிட்டான். அவனைக் கண்டதும் எல்லைக் காவல் படைத்தலைவன் வீரசிம்மன் பரபரப்புடன் ஓடிவந்தான்.

"இளவரசே இவ்வதிகாலைப் பொழுதின் விஜயத்தின் மர்மம் யாதோ..."

"வீரசிம்மா இப்பாதையால் அதிகாலையில் யாராவது குதிரையில் சென்றுள்ளனரா?"

"இல்லை இளவரசே."

"பெண்ணின் அலறல் சத்தமாவது கேட்டதா?"

"இல்லை இளவரசே. இப்பிராந்தியத்தில் சருகு சரசரத்தாலும் நம் வீரர் உஷாராகி விடுவார்கள்" என்றான் வீரசிம்மன்.

"வீரசிம்மா இரவு கொள்ளிக்காடன் அரண்மனையில் புகுந்து இளவரசியைக் கடத்திக்கொண்டு சென்றுவிட்டான். படையை எந்நேரமும் உஷார் நிலையில் வைத்துக்கொள். யாராவது சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொண்டால் உடனே கைதுசெய்து கோட்டைக்கு அனுப்பிவை" என்றான் விக்கிரமன்.

"உத்தரவு இளவரசே"

அப்போது வீரன் ஒருவன் குதிரையில் வேகமாக வந்து இறங்கினான். அவனது உடல் இரத்தத்தால் தோய்ந்திருந்தது. முகத்தில் ஒரு பெரிய வெட்டுக்காயம் இருந்தது அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

விக்கிரமனை வணங்கிய வீரன் தனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தைக் கூறத் தொடங்கினான்.

(அடுத்த எண்ணத்தில்)

## மத்திய கிழக்கு நாடுகளில்

# வேலை பெற்றுத் தருவதாக பெரும் பண மோசடியாம்

## இருவர் மீது பொலிஸ் வலைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக ஏமாற்றி 82 பேரிடமிருந்து தலா 3 ஆயிரம் ரூபாவைப்பெற்றுமோசடிசெய்ததாகச் சந்தேகிக்கப்படும் இருவர் யாழ்ப்பாணம் விசேஷ குற்றத்தடுப்புப் புலன் விசாரணை பிரிவு பொலிசாரால் தேடப்பட்டுவருகின்றனர்.

தொண்டமானுறு மயிலத்தனையைச் சேர்ந்த ஐயாத்துரை விக்கினேஸ்வரன், அதே இடத்தைச்சேர்ந்த ஏ. சதாசிவம் ஆகியோரே தேடப்பட்டுவருபவர்களாவர்.

இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்தே இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டதாம்.

விக்னேஸ்வரன் என்பவர் கொழும்பு தொழில் கந்தோர் அதிகாரியின் மாதிரி முத்திரை பொறிக்கப்பட்ட கடிதங்களைப் பணம் பெற்றுக்கொண்டவர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

உரும்பராயிலிருந்து 20 பேரிடமும் அச்சுவேலியில் 11 பேரிடமும் மிகுதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களிடம் பெற்றுக்கொண்டதாகவும் யாழ். விசேட தடுப்புப் பொலிசாருக்கு இதுவரை 42 பேர் முறைப்பாடு செய்துள்ளர்.

பொலிசாரின் விசாரணைகளிலிருந்து இந்த நபர்கள் 82 பேரிடம் இவ்வாறு மோசடி செய்துள்ளதாக அறியவந்துள்ளது. இம்மோசடி நபர்களுக்குப் பின்னல் ஒரு சில அரசாங்க உத்தியோத்தர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சில தினங்களுக்குமுன் சந்தேக நபர்களில் ஒருவர் முத்தையன்கட்டில் இருப்பதாகத் தகவலறிந்து அங்கு சென்றபோது பொலிசாரைக் கண்டுவிட்டு அந்த நபர் காட்டுக்குள் ஒடி மறைந்துவிட்டாராம்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ். விசேட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவு ரார்ஜண்ட் ஈ. அப்பையா மேற்கொண்டுள்ளார். (கூ-அ)

## சகல நிலைகளிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஓர் இனம் வாழ, பண்பாடு, கலை, கலாச்சாரம், மொழி ஆகியவற்றில் வளர்ச்சி பெறவேண்டும்.

"கடந்த 58-ம், 73-ம் ஆண்டுக் கலவரங்களில் சிறுபான்மைத் தமிழரென்றே, பெரும்பான்மைத் தமிழரென்றே வித்தியாசம் பாராட்டி தென்னிலங்கையில் கொலை-கொள்ளை - கற்பழிப்பு போன்ற தீயசெயல்கள் நடைபெறவில்லை. தமிழராகிய நாம் எல்லோரும்தான்பாதிக்கப்பட்டோம்.

"தென்னிலங்கை சென்ற சிறுபான்மை தமிழ் பௌத்த மக்களின் நிலையையும் நாம் நன்கு சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

"நாம் தனித்துநின்று எதையும் பெறமுடியாது. சகல நிலைகளிலும் ஒற்றுமையை நிலைநாட்டி, ஒத்துழைத்து, பங்காளிகளாக இருந்து கூட்டணியை பலம்வாய்ந்த ஓர் இயக்கமாக உருவாக்கவேண்டும். அதனுள்ளிருந்துதான் எமது பிரச்னைகளைத் திர்க்க முயலவேண்டும்.

"நான் கல்வித்துறையிலே உயர்படிப்பு படித்திருந்தும் வடபகுதியிலே வட்டாரவித்தியாதரிசியாகத்தான் பணியாற்றக்கூடியதாக இருந்தது. எனது தகுதிக்கேற்ற உத்தியோக உயர்வு வழங்கப்படவில்லை.

"எமது அரசியல்-இன விடுதலைக்கு முன்பு சமூகவிடுதலை காணவேண்டும். கல்வி வளர்ச்சி ஒரு சமூகத்தைப் பாதிக்காது. சமூக முன்னேற்றத்துக்காக-அபிவிருத்திக்காக நாம்பாடுபடவேண்டும்.

"எமது சமூகங்களின் முன்னேற்றம் கல்வி - பொருளாதார வளர்ச்சியில் தங்கியுள்ளது. குடியிருப்பதற்குசொந்தமாகக் காணி நிலம் வேண்டும்.

எமது சமூக மக்களின் அபிவிருத்தி கருதி நான் பாராளுமன்றத்திலும் சரி, எனது கட்சிக் \ கூட்டங்களிலும் கோரிக்கைகள் விடுத்துவருகின்றேன். எமது சமூக மக்களின் முன்னேற்றம் ஒன்றுதான் எனது குறிக்கோள். ஆகவே அக்டோபர் 2-ம் திகதிக்குள் சமூக ஏற்றத்தாழ்வுகள் எமது மத்தியிலிருந்து நீங்கிவிடும் என்பது எனது நம்பிக்கை. இதற்கு அறிகுறியாக உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சகல மக்களும் என்னைப் பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவு செய்தது அமைந்துள்ளது."

எதிர்க் கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ.அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"நாமிருக்கும் நாடு நமது நாடு. இதில் வாழும் எல்லோரும் ஒரு குலம், ஓர் இனம், எல்லோரும் இந்த நாட்டு மன்னர்கள். இந்தத் தாரகமந்திரத்தை, இளம் சிறுர்களுக்குப் போதிக்க வேண்டிய கடமை இன்றைய ஆசிரிய சமுதாயத்தின் முக்கிய பொறுப்பாகும்."

எம்மிடையே இருக்கும் சாதிப் பிரச்னையால்தான் எமது உரிமைகளைப் பெற முடியாது தாழ்வுற்றிருக்கின்றோம். சாதிப்பிரச்னை தமிழருக்கு ஒரு சாபக்கேடு இப்பிரச்னை முற்று முழுதாக நீங்கினல்தான் எமது தமிழ் இனம் முன்னேறும் இனவிடுதலைக்கு தீண்டாமை ஒருதடைக்கல்லாக இருக்கிறது.

"தமிழன் அடிபட்டு உதைபட்டு இரத்தம்சிந்தி உயிர்களைதத்தம் செய்து உடைமைகள் பறிக்கப்பட்டு அல்லோல கல்லோலமான நிலையில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறுன். இவற்றைத்தட்டிக்கேட்க இன்று ஆட்களில்லை.

ஆசிரியர் சிவநாதபிள்ளையால் அமைக்கப்பட்ட செயற்திட்டப்பொருட்காட்சியைப் பார்க்கும் போது இன்னும் நிறையப்படிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் நன்கு புரிந்துகொண்டேன். அது எமது இனத்தின் வருங்காலத் திட்டங்களுக்கு நன்கு பயன்படுவதற்கு உதவியாயிருக்கும்.

பெற்ருர் ஆசிரியர் சங்க உறுப்பினர் திரு. க. சுப்பிரமணியம் மேற்படி பாடசாலையில் விளையாட்டு மைதானத்தின் அவசியம் குறித்து மகஜர் சமர்ப்பித்துப் பேசினர்.

கனிஷ்ட அதிபர் திரு. சி. சிவநாதபிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆசிரியர் த. கந்தவனம் காங்கேசன்துறை வட்டாரக் கல்விஅதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், திரு. ஏ.வி. மாணிக்கம் பெற்ருர் ஆசிரியர்சங்கக் காரியதரிசி திரு. க. வேலாயுதம் உட்படபலர் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஈ)


## வீட்டுக்கிருத்திய அறிவித்தல்

சீனியர் வேலுப்பிள்ளை இராஜதுரை
அவர்கள்
தர்மகர்த்தா
வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்பாள் ஆலயம்
வண். கிழக்கு கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

பிறர் துயரையும் தனது துயராக எண்ணி, அறநெறியில் சென்று எம்மைத் தாங்கொணுத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவன் திருவடி நிழலை அடைந்துவிட்ட எமது அன்புத் தெய்வமே (அன்னரின்) தங்களின் வீட்டுக்கிருத்தியம் மேற்படி இல்லத்தில் சமய ஆசாரப்படி இன்றைய தினம் (3-9-1978) நடைபெறும். அத்தருணம் அன்னரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சும் வண்ணம் தங்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

அன்னரின் சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்.

51, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 0237


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu, Telephone 389. Registred as a Newspaper in Srilanka.

## கழிவுச்சாயம் நன்னீருடன் கலக்கும் அபாயம்

### தொழிற்சாலையை அகற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு நெய்தல் சங்கம் திருநெல்வேலியில் அமைத்துள்ள சீலை சாயம்போடும் தொழிற்சாலையில் இருந்து வரும் கழிவுச் சாயம், யாழ். மாநகர நன்னீர் கிணற்றுடன் கலக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் அத்தொழிற்சாலையை அவ்விடம்விட்டு அகற்றவேண்டும்;

யாழ்ப்பாணம் பாவனையாளர் சங்கக்கூட்டத்தில், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்தைக் கேட்டுக்கொள்ளும் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

சட்டத்தரணி ஏ. அன்ரனி தலைமையில்நடந்தஇக்கூட்டம் ஆரம்பத்தில் சங்க உறுப்பினர் அமரர் ஏச். டி. ஞானசேகரம் மறைவு குறித்து 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ரயில்வேவிசாரணைக்குழுவை பேட்டி கண்டு சமர்ப்பித்த கோரிக்கையான வார இறுதி பிரயாணச் சீட்டு வழக்கப்படுவதை விசாரணைக்குழு சிபார்சு செய்துள்ளதற்கு நன்றிதெரிவிம்பதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

காங்கேசன்துயிலிருந்து கொழும்புவரை மேலும் ஒரு கடுகதி புகையிரத சேவையை நடத்தவேண்டும் என்று அமைச்சரையும் ரயில்வே திணைக்களத்தையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும்நிறைவேறியது. இப்புகையிரதம் யாழ்ப்பரணம், கொடிகாமம். கிளிநொச்சி, வவனியா,அனுராதபுரம், மாகோ, பொல்காவலையில்மட்டும் தங்கவேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

யாழ். பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஏ. எகொடபிட்டியா ஆஸ்பத்திரிவீதி-மணிக்கூட்டுவீதி சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதிவரையுள்ள நடைபாதையில் பாதசாரிகளுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தியமைக்காக சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. மேலும் அவரின் ஆலோசனையின் பேரில் யாழ்ப்பாண விசேட ஆணையாளர், பொறியியலாளர், யாழ். பாவனையாளர் சங்கப்பிரதிநிதிகள். வாடகை கார்ச் சங்க பிரதிநிதிகள் கொண்ட மகாநாட்டைக்கூட்டி போக்குவரத்து ஒழுங்குகள்பற்றி ஆலோசிப்பதற்கு ஒரு கூட்டத்தைக் கூட்டும்படி விசேட ஆணையாளரைக் கேட்டுக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

யாழ். வீதிகளின் ஓரங்களில் பூங்காக்கள் அமைத்துத் தரும்படி விசேட ஆணையாளரைக் கேட்டுக்கொள்வதெனவும் வீதிகளில் நடட்பட்டுள்ள மரங்களுக்கு பாதுகாப்பு வேலி உயரமாக அடைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் மேற்பார்வையிலுள்ள நடைபாதைகள், வீதி லாம்புகள், அழுக்கு நீர் கால்வாய்கள் சீர்கேட்டில் உள்ளதால் அதையிட்டும் மேலும் பல விடங்கள்பற்றி விசேட ஆணையாளரைப் பேட்டிகாண்பது என தீர்மானிக்கப்பட்டது.

## அமிர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

ஆதரவாளர்கள், இளைஞர் பேரவை,மகளிர் பேரவை உறுப்பினர்கள்பலர் கொழும்பு வந்து சேர்ந்திருக்கின்றனர். சுமார் இரு மாதகாலப் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யவுள்ள அமிர் இன்று மாலை மக்களுக்கு ஒரு செய்தியொன்றையும்வெளியிடுவார்.

ஜமேய்க்காவில் நடைபெறவுள்ள பொதுநல நாடுகளின் பாராளுமன்ற சபையின் 24-வது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக செல்லும் திரு. அமிர்தலிங்கம் தமது மனைவியுடன் லண்டன், அமெரிக்கா, கனடா,இந்தியா ஆகியநாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

இன்று இங்கிருந்து புறப்பட்டு நேராக லண்டன் செல்லும் இவர்கள் லண்டனில் இரு வாரகாலம் தங்கியிருப்பர். (ம)

## வட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் தென்னிந்தியாவில் காவிரி நீரைப் பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாக தமிழ் நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் முதன் மந்திரிகளின் ாமநாடு நாளை செப்டம்பர் 3-ம் தேதி ஆரம்பமாகவிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

## ஆனைக்கோட்டையில் கலைஇலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் சனசமூக கலைஇலக்கிய விழா இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஐந்து தினங்கள் விழா நடைபெறும். முதல்நாள் நிகழ்ச்சிகளில் பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இரண்டாம் நாளான 4-ந் திகதி "மூளையை நீயே ஏற்ற முறைதனில் முடுக்குவாயே" என்ற தலைப்பில் கவியரங்கு நடைபெறும்.

கவியரங்குக்கு திரு. பொன். பொன்ராசா தலைமைதாங்குவார் கவிஞர்களான இளங்கோவன், நல்லை அமிழ்தன் தேவபரமலிங்கம், நந்தினி சேவியர், பாஷையூர் தேவதாஷன், ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஐந்தாம் நாளான 7ந்திகதி வாழ்க்கைக்கா கலையா? என்ற தலைப்பில் திரு. கே. டானியல் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும்.

பட்டிமன்றத்தில் தேவன் பண்டிதர் க. வீரகத்தி நாகேஸ்வரன் சிவலிங்கராஜா செல்விகள் எஸ். சுமந்திரி அம்மன்கிளி ஆகியோர் பங்கு பற்றுவர்.

இறுதிநாளன்று திருமதி சித்திரலேகா மௌனகுரு கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோர் பேசுவர். (கெ-அ)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE DOLLAR

டாலர்

அலுமினியம்